1118

GEOGRAPHY
OF THE
SALEM DISTRICT

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-7 DEC 1939
MADRAS

1118
32290



By
S. V. VENKATRAMAN.

T. V. CHELLAPPA SASTRY & SONS.

சேலம் ஜில்லா

பூகோள சாஸ்திரம்

915·482 DJ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-7 DEC 1939
MADRAS

எஸ். வி. வெங்கட்ராமன்
எழுதியது.

சென்னை
டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்

காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்தது.]

[விலை அணா 4.

First Edition November 1939

T. V. C. PRESS,
MADRAS.

முகவுரை

இப்புத்தகம் வித்தியா இலாகா அதிகாரிகளால் பிரசுரிக்கப்பட்ட புதிய பாட திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. முதற் பகுதியில் காணப்படும் விஷயங்கள் சிறு மாணவர்களுக்கு எளிதில் விளங்குமாறு தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. பிள்ளைகள் கால பேத அட்டவணை, சித்திரம் முதலியன வரைவதற் கநுகூலமாக சில குறிப்புக்கள் ஆங்காங்கே தரப்பட்டிருக்கின்றன.

பின் பகுதியில் நமது ஜில்லா பூகோள சம்பந்தமான விஷயங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கு வேண்டிய அளவு படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாட முடிவிலும் பயிற்சி கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப் புத்தகம் சிறு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன்.

எஸ். வி. வெங்கட்ராமன்.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	திசைகளும் உபதிசைகளும்	1
2.	கால பேதம்	2
3.	பருவங்கள்	3
4.	வாயுவும் காற்றும்	5
5.	தண்ணீர் ஆவியாதல்	7
6.	மழையின் வேலை	8
7.	கடலும் கப்பற் பிரயாணமும்	11
8.	கிராமமும் பட்டணமும்	13
9.	வியாபாரமும் தொழிற்சாலைகளும்	17
10.	போக்குவரவு சாதனங்கள்	18
11.	உள்ளூர் விளைபொருள்கள்	19

சேலம் ஜில்லா

1.	இயற்கை அமைப்பு	21
2.	நதிகள்	24
3.	விளைபொருள்கள்	27
4.	கைத்தொழிலும், வியாபாரமும்	28
5.	முக்கிய பட்டணங்கள்	28
6.	போக்குவரவு சாதனங்கள்	39
7.	ஜீவனோபாயங்கள்	40

சேலம் ஜில்லா

பூகோள சாஸ்திரம்

1. திசைகளும் உபதிசைகளும்

பிள்ளைகளே! மூன்றாம் வகுப்பில் நான்கு திசைகளை எவ்வாறு அறிவதெனப் படித்தீர்களல்லவா? சூரியன் உதிக்கும் திசை கிழக்கு; சூரியன் அஸ்தமிக்கும் திசை மேற்கு; ஒருவன் சூரியனைப் பார்த்து நின்றால் அவனது இடது பக்கம் வடக்கு; வலது பக்கம் தெற்கு.

இத் திசைகளின் உபயோகம் என்னவென்றும் தெரிந்து கொண்டீர்கள். உங்கள் கிராமத்தின் எல்லையைக் குறிக்க திசை அவசியம். ஒரு கிராமத்தின் இருப்பிடத்தைக் குறிக்கவும் திசை அவசியம். உதாரணமாக, ஓர் ஊர் மற்றொரு ஊருக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்திலிருக்கிறதெனக் கூறுகிறோம். இதைத் தவிர காற்று வீசும் திசையறியவும், ஆகாய விமானம், இரயில் முதலானவை செல்லும் திசையறியவும் இந் நான்கு திசைகள் உபயோகமாயிருக்கின்றன.

சில சமயங்களில் காற்று வடக்குத் திசைக்கும் கிழக்குத் திசைக்கும் நடுவே வீசுகிறது. இத் திசையை எவ்வாறு குறிப்பது? இத் திசையை வடகிழக்குத் திசை யெனக் குறிப்பிடுவது வழக்கம். இதைப்போலவே தெற்குக்



திசைகள்



உபதிசைகள்

கும் கிழக்குக்கும் நடுவிலுள்ள திசைக்கு தென் கிழக்கு என்று பெயர். தெற்குக்கும் மேற்குக்கு மிடையேயுள்ள திசைக்குத் தென் மேற்கு என்று பெயர். வடக்குக்கும் மேற்குக்கும் இடையேயுள்ள திசைக்கு வட மேற்கு என்று பெயர். இந் நான்கு திசைகளுக்கு உபதிசைகள் என்று பெயர்.

பயிற்சி

1. உங்கள் புத்தகத்தில் எட்டுத்திசைகளைக் காட்டப் படம் வரைக. அதில் எட்டுத் திசைகளையும் குறிப்பிடுக.

2. காற்று தெற்குக்கும் மேற்குக்கு மிடையேவீசினுல் அக்காற்றின் பெயரென்ன?

3. ஒருவன் தெற்குக்கும் கிழக்குக்கு மிடையே பிரயாணம் செய்தால் அவன் போகும் திசையின் பெயரென்ன?

4. ஒரு ஆகாயவிமானம் வடக்குக்கும் மேற்குக்கு மிடையே பறந்து சென்றுல் அது எத் திசையில் பறந்து செல்லுகிறது?

5. வடமேற்குக்கு நேர் எதிர்திசை யெது?

6. தென்மேற்குக்கு நேர் எதிர் திசை யெது?

2. காலபேதம்

பிள்ளைகளே! அதிகாலையில் சூரியன் உதயமாகும்போது வெப்பம் அதிகமாயிருக்கிறதா? இல்லையே! சூரியன் மேலே உயர உயர உஷ்ணம் அதிகமாகிறது. மாலையில் சூரியன் தாழும்போது உஷ்ணம் குறைந்துகொண்டே போகிறது. ஒரே நாளில் உஷ்ணம் ஒரே அளவாயிராமல் வேறுபடுகிற தல்லவா?

ஒரு மாதத்தில் எல்லா நாட்களும் ஒரே உஷ்ணமுடையவைகளா யிருக்கின்றனவா? சில நாட்களில் காலைமுதல் மாலை வரையில் சூரியன் பிரகாசிக்கிறுன். ஆகாயம் மேகங்களின்றி சுத்தமாயிருக்கிறது. அன்று உஷ்ணமும் அதிகமாயிருக்கிறது. சில நாட்களில் சூரியனே நமது கண்களுக்குத் தெரிவதில்லை. ஆகாயத்தில் மேகங்கள் மூடியிருக்கின்றன. மழை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பெய்து கொண்டே யிருக்கிறது. அன்று சூரிய உஷ்ணம் பூமியில் படாததால் குளிர்ச்சியா யிருக்கிறது. சில நாட்களில் ஆகாயத்தில் மேகம் சஞ்சாரம் செய்துகொண்டே யிருக்கிறது. மழை யிராது. சூரியன் விட்டு விட்டுப் பிரகாசிப்பான். சூரிய உஷ்ணத்தை மேகங்கள் தடுத்து விடுவதால் அன்று மித உஷ்ணமாயிருக்கிறது.

ஆகையால் நாம் காலபேதத்தை அநுசரித்து நாட்களை (1) சூரியப்பிரகாசமான நாட்கள் (2) மழை நாட்கள் (3) மப்பு மந்தாரமான நாட்கள் என்று கூறுவது வழக்கம்.

கால பேத அட்டவணை

ஒரு அட்டவணையில் வருடம், மாதம், தேதி குறிப்பிட்டு ஒவ்வொருநாளையும் மேற்கூறியபடி விவரி. இவ்வாறு ஒருவருடம் செய்து வந்தால், அந்த அட்டவணையிலிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு வருடத்தில் எத்தனை நாட்கள் மழை நாட்கள்? எத்தனை நாட்கள் மப்பு மந்தாரமான நாட்கள்? எந்த மாதத்

காலபேத சித்திரம்

	ஜன.	பிப்.	மார்ச்	ஏப்.	மே.	ஜூன்	ஜூலை	ஆக.	செப்.	அக்.	நவ.	டிச.
1												
2												
3												
4												
5												
6												
7												
8												
9												
10												
11												
12												
13												
14												
15												
16												
17												
18												
19												
20												
21												
22												
23												
24												
25												
26												
27												
28												
29												
30												
31												

சூரியப் பிரகாசமான நாள்

மழை நாள்

காலை வெயில் - மாலை மழை

காலை மழை - மாலை வெயில்

இடியுடன் கூடிய மழை

மப்பு மந்தாரமான நாள்

தில் மழை அதிகம்? எந்த மாதத்தில் மழையே யில்லை? என்ற பல கேள்வி களுக்குப் பதில் கூறலாம்.

காலபேத சித்திரம்

இதைப் படம் வரைந்துங் காட்ட லாம். ஒரு நாளைக் குறிக்க ஒரு சது ரக் கட்டம் வரை. ஒரு மாதத்தில் 30 சதுரக் கட்டங்கள் இருக்குமல்ல வா? அக் கட்டங்களின் பக்கத்தில் 1, 2, 3, 4 என்று தேதியைக் குறிப்பிடு.

ஒரு நாள் மழைநாளா யிருந்தால் கட்டத்தில் நீலநிறங் கொடு. காலையில் மழை பெய்து மாலையில் வெயில் காய்ந்தால் கட்டத்தின் மேற் பாதிக்கு மட்டும் வர்ணங்கொடு. காலையில் வெயில் காய்ந்து மாலையில் மழை பெய்தால் கட்டத்தின் கீழ்ப்பாகத்தில் வர்ணங்கொடு. அன்று இடி இடித்து அதிக மழை பெய்தால் கருப்பு வர் ணங் கொடு. மப்பு மந்தார நாளா யிருந்தால் மஞ்சள் வர்ணங் கொடு. சூரியப் பிரகாசமான நாளாயிருந்தால் வெள்ளையாய் விட்டு விடு. இவ்வாறே ஒவ்வொரு நாளும் குறித்துக்கொண்டு வா. பாடசாலை விடுமுறை நாட்களி லும் குறிக்க வேண்டும்.

இதைப்போல பன்னிரண்டு மாதத் திற்கும் படத்தில் காட்டியபடி கட்டம் போட்டுக் காட்டலாம்.

பயிற்சி

1. ஒரு நாளில் உஷ்ணம் எவ்வாறு வேறு படுகிறது?
2. ஒரு வருடத்தில் நாட்களை காலபேதத் திற் கேற்ப எவ்வாறு பிரிக்கலாம்?
3. உங்கள் கிராமத்தில் எம்மாதத்தில் மழை நாட்கள் அதிகமாயிருக்கின்றன?
4. கோடைக்காலத்தில் மழை காலையில் பெய்கிறதா? மாலையில் பெய்கிறதா?
5. மப்பு மந்தாரமான நாட்களில் மித உஷ்ணமா யிருப்பதேன்?

3. பருவங்கள்

பிள்ளைகளே! தினந்தோறும் சூரி யன் கிழக்கே உதயமாகு மிடத்தைக் கவனித்துப் பாருங்கள். சூரியன் ஒரே இடத்தில் உதயமாவதில்லை. உதயமாகு மிடம் நாளுக்கு நாள் சிறிது மாறிக் கொண்டே வரு கிறது. வருடத்தில் சில நாட் களில் சூரியன் நமக்கு வடக்கே உதயமாவதாகத் தெரியும். சில நாட்களில் தெற்கே உதயமாவ தாகத் தெரியும்.

தினந்தோறும் சூரியன் உதய மாகும் காலத்தையும், அஸ்தமிக் கும் காலத்தையும் கவனியுங்கள். அது வும் ஒரே மாதிரியிராது. நாளுக்கு நாள் வித்தியாசப்படும். சில மாதங் களில் சூரியன் அதிகாலையில் உதய



சூரியோதய மாறுதல்

மாவான். நீங்கள் எழுந்திருந்து பாடம் படித்துப் பள்ளிக்குப் போகப்

போதிய காலமிருக்கும் மாலையில் பள்ளிக் கூடம் விட்டவுடன் அதிக நேரம் விளையாடவும் வெளிச்ச மிருக்கும். அப்போது பகற் காலம் அதிகம், இராக்காலம் குறைவு.

சில மாதங்களில் நீங்கள் காலையில் எழுந்திருந்து பாடம் படிக்கு முன்னர் பள்ளிக்குப் போக நேரமாய் விடும். மாலையில் பாடசாலை விட்டதும் அதிக நேரம் விளையாட முடியாதபடி சீக்கிரம் இருட்டி விடும். இம்மாதங்களில் பகற்காலம் குறைவு; இராக்காலம் அதிகம்.

இவ்வாறு பகல், இரவு காலம் வித்தியாசப்படுவதற்குச் சூரியன் உதயமாகுமிடம் வித்தியாசப்படுவதே காரணமாகும். சூரியன் சில மாதங்களில் நமக்கு வடக்கே இருப்பதாலும், சில மாதங்களில் தெற்கே யிருப்பதாலும் வருடத்தில் சில நாட்கள் உஷ்ணமாகவும், சிலநாட்கள்மழை நாட்களாகவும், சில நாட்கள் குளிர் நாட்களாகவும் இருக்கின்றன. இவ்வாறு ஏற்படும் சீதோஷ்ண மாறுதல்களை அநுசரித்து நமது முன்னோர் ஒரு வருடத்தை ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை யாவன :

1. இளவேனிற் காலம்
(சித்திரையும் வைகாசியும்)
2. முது வேனிற் காலம்
(ஆனியும் ஆடியும்)
3. கார் காலம்
(ஆவணியும் புரட்டாசியும்)
4. குளிர் காலம்
(ஐப்பசியும் கார்த்திகையும்)
5. முன் பனிக் காலம்
(மார்கழியும் தையும்)
6. பின் பனிக் காலம்
(மாசியும் பங்குனியும்)

பூகோள சாஸ்திரிகள் நமது நாட்டின் சீதோஷ்ணத்தை அநுசரித்து ஒரு வருடத்தை மூன்று பிரிவுகளாகவே பிரித்திருக்கிறார்கள். அவை (1) கோடைக் காலம் (2) மழைக்காலம் (3) குளிர் காலம் எனப்படும்.

கோடைக் காலம் :—மே மாத முதல் ஆகஸ்டுமாதவரையில் கோடைக்காலம் எனப்படும். இக்காலத்தில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். இக் காலத்தில் உங்களுக்கு கோடைக்கால விடுமுறை கிடைக்கிறது. மரங்களெல்லாம் புஷ்பித்துக் காய்க்க ஆரம்பிக்கும். புஷ்பங்கள், காய்கறிகள் முதலியன அதிகமாகக் கிடைக்கும். இக்காலத்தில்தான் கோயில்களில் உற்சவங்கள் நடக்கும். கலியாணங்களும் அதிகமாக நடைபெறும். இக்காலத்தில் ஆகாயம் மேக சஞ்சாரமின்றி சுத்தமாயிருக்கும். சில சமயங்களில் மாலையில் திடீரெனக் கருமேகங்கள் தோன்றி கனத்த மழை பெய்யும். மழை பெய்தவுடன் குடியானவர்கள் நிலத்தை உழுது ஆறப் போடுவார்கள். இக்காலத்தில் பகற் காலம் இராக்காலத்தைவிட அதிகமாயிருக்கும்.

மழைக்காலம் :—செப்டம்பர் மாதமுதல் டிசம்பர் வரையில் மழைக்கால மெனப்படும். இக்காலத்தில் உஷ்ணம் சிறிது குறையும். சூரியன் நமக்குத் தெற்கில் காணப்படுவான். காற்று வடகிழக்குத் திசையிலிருந்து வீசும். இக்காற்றுடன் ஆகாயத்தில் மேகங்கள் சஞ்சரிப்பதைப் பார்க்கலாம். நாடு முழுவதும் மழை பெய்யும். அநேக நாட்களில்

சூரியனே தெரியாது. இம் மழையால் ஏரிகள், குளங்கள் முதலியனவெல்லாம் நிரம்பும். குடியானவர் பயிர் செய்ய ஆரம்பிப்பார்கள். இக்கால முடிவில் அறுவடை செய்வார்கள். இக்காலத்தில் பகற்காலம் இராக்காலத்தை விட குறைவா யிருக்கும்.

குளிர் காலம் :—ஜனவரிமாத முதல் ஏப்ரல் மாதவரையில் குளிர்கால மெனப்படும். இக்காலத்தில் மழை யிராது. குளிர் அதிகமாயிருக்கும். இரவில் பனி அதிகமாகப் பெய்யும். ஜனங்கள் கம்பளிகளையும் சால்வை களையும் போர்த்துக் கொள்வார்கள். நிலங்களெல்லாம் அறுவடையாய் விடுவதால் பயிர்கள் ஒன்றும் காணப் படாது. காய்கறிகளும் விசேஷமாகக் கிடைக்காது.

பயிற்சி

1. சூரியன் கிழக்கில் ஒரே இடத்தில் உதய மாகிறதா?

2. ஒரு வருடத்தில் நாட்கள் எல்லாம் ஒரே அளவா யிருக்கின்றனவா? வித்தியாசப் படு கின்றனவா? இதற்குக் காரணமென்ன?

3. நமது முன்னோர்கள் ஒரு வருடத்தை எத்தனை பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள்? அவைகளின் பெயரென்ன?

4. பூகோள சாஸ்திரிகள் ஒரு வருடத்தை எத்தனை பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள்? அவைகளின் பெயரென்ன?

5. கோடைக் காலத்தில் கலியாணங்கள் விசேஷமாக நடப்பதேன்?

6. கோடைக்காலத்தில் மழை எப்படி பெய் கிறது?

7. உங்கள் ஊரில் எம்மாதங்களில் மழை அதிகமாகப் பெய்கிறது?

8. எம்மாதங்களில் குளிர் அதிகமா யிருக் கிறது?

9. குளிர் காலத்தில் ஜனங்கள் என்ன செய் கிறார்கள்?

4. வாயுவும் காற்றும்

நாம் வசிக்கும் பூமியைச் சுற்றி வாயு வியாபித்திருக்கிறது. இதற்கு வாயு மண்டலம் என்று பெயர். மீன்கள் தண்ணீராலாகிய சமுத்திரத்தினடியில் வசிப்பதுபோல், நாம் வாயுவினாலாகிய சமுத்திரத்தினடியில் வசிக்கிறோம். பிராணிகளும் தாவரங்களும் உயிரோ டிருப்பதற்கு இந்த வாயு அவசியம் வேண்டும்.

இந்த வாயு நமக்குப் புலப் படுவதில்லை. இதனால், இது ஒரு வஸ்துவல்ல வென்று நினைக்கிறோம். வாயு அசையும்போது அதை உணரு கிறோ மல்லவா? வாயு வேகமாக வீசும் போது அதைக் காற்று என்று கூறுகி றோம். காற்றுக்கு மரங்களைப் பிடுங்கி எறியும் சக்தி உண்டு. புயல் காற்றா னது கட்டடங்களையும் இடித்து விடு கிறதல்லவா? இதனால் வாயுவும் கல், தண்ணீர் முதலான வஸ்துக்களைப் போன்ற ஒரு வஸ்து வென்று தெரி கிறது. கல், தண்ணீர் முதலான வஸ்துக்களுக் கிருப்பதுபோலவே வாயுவுக்கும் எடை உண்டு.

காற்று உண்டாகும் விதம் :—படத்தில் காட்டியபடி ஒரு பெட்டியை எடுத்துக்

கொள்ளுங்கள். அதன் முன்புறம் கண்ணாடிக் கதவால் மூடப்பட்டிருக்கிறது. மேல் பாகத்தில் இரு துவாரங்கள் இருக்கின்றன. இத் துவாரங்களில் இரு சிம்னிகள் சொருகப்பட்டிருக்கின்றன. ஒரு துவாரத்தினடியில் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றி



வைத்துக் கதவை மூடிவிடு. ஒரு புகையும் கந்தைச் சுருளை எடுத்துக்கொள். அதை இரு சிம்னியின் வாயின்மேல் பிடி. புகை எப்படி செல்கிறதெனக் கவனி. விளக்கின்மேலிருக்கும் சிம்னியில் புகை வெளியே செல்லும். மற்ற சிம்னியில் புகை உள்ளே செல்லும். இதற்குக் காரணமென்ன ?

விளக்கின் அருகிலுள்ள வாயு உஷ்ண மடைகிறது. அது இலேசாகி மேலே கிளம்பிப் போகிறது. அவ்விடத்தை அடைத்துக்கொள்ள மற்ற சிம்னியின் வழியாகக் குளிர்ந்த வாயு உள்ளே வருகிறது.

நமக்குச் சூரியனிடமிருந்து உஷ்ணம் கிடைக்கிறதல்லவா? பூமியில் எல்லா பாகங்களும் ஒரே அளவாக உஷ்ணமடைவதில்லை. ஓரிடம் அதிக உஷ்ண மடைகிறது. மற்றோரிடம் குறைந்த உஷ்ணமடைகிறது. அப்போது குறைந்த உஷ்ணமடைந்த இடத்திலிருக்கும் வாயு அதிக உஷ்ணமடைந்த இடத்தை நோக்கி வீசுகிறது. இவ்வாறு வாயு அசையும் போது அதைக் காற்றென்று கூறுகிறோம்.

காற்று வீசும் திசையறியும் விதம்: ஓர் ஊரில் காற்று எக்காலத்திலும் ஒரே



காற்றம்பு

திசையில் வீசாது. இது காலத்திற்கேற்ப வித்தியாசப்படும். காற்று வீசும் திசையை அறிய ஓர் உயர்ந்த கட்டடத்தின் உச்சியில் காற்றம்பு என்ற கருவியை அமைப்பது வழக்கம். இதில் ஒரு பலகை அம்புபோல் செய்யப்பட்டிருக்கிறது. இது கம்பத்தில்



காற்றம்பு அமைக்கப்பட்ட கட்டடம்

சுழலும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கடியில் கம்பத்தில் அசையா வண்ணம் திசைகளைக்காட்ட

நான்கு சட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

காற்றடிக்கும்போது அம்பின் பலகைமீது தாக்கி அதைத் திருப்பிவிடும். அப்போது அந்த அம்பின் முனை காற்றின் திசையைக் காட்டுகிறது.

உங்கள் பள்ளிக்கூடத்தின் மேல் ஒரு காற்று அம்பு அமையுங்கள். அது காட்டும் திசையைத் தினந்தோறும் ஒரு அட்டவணையில் குறித்துக் கொள்ளுங்கள்.

பயிற்சி

1. வாயு மண்டலம் என்றால் என்ன ?

2. வாயுவை நாம் எப்போது உணருகிறோம்?

3. காற்று என்றால் என்ன? காற்றுக்கு அதிக சக்தியுண்டு என்பதை ரூபிக்க சில உதாரணங்கள் தருக.

4. காற்று வீசுவதற்குக் காரணம் என்ன ?

5. காற்று வீசும் திசையை எவ்வாறு அறியலாம் ?

6. உங்கள் ஊரில் பிரதி மாதமும் காற்று வீசும் திசையைக் கூறுக.

7. காற்று அம்பு என்றால் என்ன? இதன் உபயோகமென்ன?

8. எம் மாதங்களில் காற்று தெற்கிலிருந்து வீசுகிறது ?

9. மழைக்காலத்தில் காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது ?

5. தண்ணீர் ஆவியாதல்

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அடுப்பின்மேல் வைத்து உஷ்ணப்படுத்து. தண்ணீர் கொதித்து மூக்கின் வழியாக நீராவி வருவதைப்பார். நீராவி நமது கண்களுக்குப் புலப்படாது. மூக்கினருகில் நீராவி தெரிகிறதா? இல்லையே! சிறிது தூரத்தில் புகைபோல் தெரிகிறதல்லவா? அது நீராவியல்ல. அது நீராவி குளிர்ந்து உண்டான நீர்த் திவலைகளாகும். அங்கு ஒரு குளிர்ந்த கரும் பலகையைப் பிடி. அப் பலகையின்மேல் சிறு நீர்த்துளிகள் படிவதைப்பார். இதனால் தண்ணீரை உஷ்ணப்படுத்தினால் அது நீராவியாகுமென்றும், நீராவியைக் குளிர்ச்சி செய்தால் அது தண்ணீராக மாறுமென்றும் தெரிகிறது?

தண்ணீர் கொதிக்கும் போதுதான் நீராவி யாகிறதென நினைக்கவேண்டாம். அது எக்காலத்திலும் ஆவியாகிக் கொண்டே இருக்கிறது. இரவில் ஒரு ஈரத்துணியைக் காற்றில் பிடித்



தண்ணீர் ஆவியாதல்

தால் அது உலர்ந்து விடுகிறதல்லவா? அதிலிருந்த நீர் எங்குப் போயிற்று? அது ஆவியாகிக் காற்றோடு கலந்து விட்டது.

மை யொற்றும் காகிதத்தின் ஒரு முனையை மையில் துவைத்தால் அது மையை உறிஞ்சுகிறதல்லவா? காகித முழுமையும் மை பரவுகிறதல்லவா? அதைப்போலவே காற்றுக்கு நீராவியை உறிஞ்சும் சக்தியுண்டு. ஆகவே தம்மைச் சுற்றியுள்ள காற்றில் எப்போதும் ஓரளவு நீராவி கலந்திருக்கிறது.

மழை :—சூரிய உஷ்ணத்தால் கடல், ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் எப்போதும் ஆவியாகிக் கொண்டே யிருக்கிறது. இந்த ஆவி காற்றைவிட இலேசானது. ஆகையால், இது காற்றுடன் கலந்து உயரச் செல்லுகிறது. உயரப் போகப் போகக் காற்று குளிர்ச்சியடைகிறது. ஆகவே ஓர் உயரத்தில் நீராவியானது குளிர்ச்சியடைந்து சிறு நீர்த்திவலைகளாக மாறுகிறது. அப்போது அது வெண்மையான மேகமாக நமக்குப் புலப்படுகிறது. இம் மேகங்கள் திடீரென்று குளிர்ச்சியடைகின்றன. அப்போது அவை கருமையாகத் தோன்றும். சிறு நீர்த்திவலைகள் ஒன்று சேர்ந்து பெரிய மழைத் துளிகளாகின்றன. இவை காற்றைவிட பளுவா



மழையுண்டாகும் விதம்

யிருப்பதால் மழையாகக் கீழே விழுகின்றன.

பயிற்சி

1. தண்ணீரை உஷ்ணப்படுத்தினால் என்னவாகிறது?

2. நீராவியைக் குளிர்ச்சி செய்தால் என்னவாகிறது?

3. நீராவி நமது கண்களுக்குத் தெரியுமா? அது எப்போது புலப்படுகிறது?

4. நீராவி மேலே உயர்ந்து செல்வதற்குக் காரண மென்ன?

5. ஓர் ஈரத்துணியைக் காற்றில் பிடித்தால் அது உலர்ந்து விடுவதற்குக் காரணம் என்ன?

6. காற்றில் நீராவி கலந்திருப்பதற்குக் காரணம் என்ன?

7. மேகங்கள் என்றால் என்ன?

8. மழை எவ்வாறு உண்டாகிறது?

9. மழை பெய்யுமுன் வெள்ளை மேகங்கள் கருமேகங்களாக மாறுவதேன்?

6. மழையின் வேலை

மழை பெய்யும்போது கவனித்துப் பாருங்கள். முதலில் விழும் மழைத் துளிகள் தரையில் ஊறி விடுகின்றன. பிறகு தரைமேல் சேர்ந்து ஓட ஆரம்பிக்கின்றன. மழைத் தண்ணீர் மேடான இடங்களிலிருந்து பள்ள

மான இடத்தை நோக்கி ஓடுகிறது. உங்கள் தெருக்களில் மழைத்தண்ணீர் ஓடுவதைப் பார்த்திருப்பீர்களல்லவா?



மழை நீர் சேர்ந்து அருவியாதல்.

மேடான பாகங்களிலிருந்து ஓடி வரும் சிறு கால்வாய்களெல்லாம் சேர்ந்து தெருவின் நடுவே ஒரு பெரிய கால்வாயாகின்றன. இக் கால்வாயில் தண்ணீர் அதிக வேகமாக வளைந்து வளைந்து ஓடும்.

தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும்போது, தரையை அறுத்து விடுகிறது. தரையிலுள்ள மிருதுவான மண்ணைக் கரைத்துக்கொண்டு போகிறது. மழைக்குப் பின் மேடான இடத்தில் சிறு மேடு பள்ளங்கள் காணப்படும். தண்ணீர் ஓடும் கால்வாய்களிலுள்ள மண்ணைக் கரைத்துக் கொண்டு போவதால், மணல் மாத்திரம் அடியில் தங்கியிருக்கும். இவ்வாறு நிலப் பரப்பில் ஓடும் தண்ணீரை ஏரிகளிலும், குளங்களிலும் தேக்கி நீர்ப்பாசனத்திற்கு உபயோகிக்கிறார்கள். இதைப் போலவே மலைப் பிரதேசங்களில், பெய்யும் மழையானது மலைகளிலிருந்து வளமான மண்ணைக் கரைத்து வருகிறது. சிறு கால்வாய்கள் ஒன்று சேர்ந்து ஒரு அருவியாகிறது. பல அருவிகள் சேர்ந்து ஒரு சிற்றாறாகவும், பல சிற்றாறுகள் சேர்ந்து ஒரு பெரிய ஆறாகவுமாகிறது.

இந்த ஆறுகள் மலைகளில் ஓடும்போது மிகவும் வேகமாக ஓடும். அப்போது பெரிய பாறைகளையும் புரட்டி உடைத்து விடும். இக்கற்கள் புரட்டப்படும்போது ஒன்றோடொன்று தேய்ந்து கூழாங்கற்களாகவும் மணலாகவும் மாறி விடுகின்றன. இந்த ஆறு உயரமான இடத்திலிருந்து சமவெளியில் பாயும்போது நீர் வீழ்ச்சி உண்டாகிறது. பிறகு இது சமவெளியில் ஓடும் போது இதன் வேகம் குறைந்து விடுகிறது. இது வளைந்து வளைந்து ஓடிக் கடலில் சங்கமமாகிறது. இது கடலருகில் செல்லும்



இயற்கையில் தண்ணீர் அடையும் மாறுதல்.

போது இதன் வேகம் மிகவும் குறைந்து விடுகிறது. இதில் கலந்திருக்கும் வண்டல் மண் அடியில் தங்கி அங்குக் கழிமுகத்தெதிர் நிலம் (டெல்டா) உண்டாகின்றது. இது மிகவும் செழிப்பாயிருக்கும்.

இந்த ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டித் தண்ணீரைக் கொண்டு போய்ப் பயிரிடுகிறார்கள்.

இவ்வாறு தண்ணீரானது மாறுதலடைந்து கடலிலிருந்து பூமிக்கும், பூமியிலிருந்து கடலுக்கும் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. தண்ணீர் இவ்வாறு சுற்றுவதால் பூமியில் பிராணிகளும் தாவரங்களும் ஜீவிக்க முடிகிறது.

பயிற்சி

1. தரையில் பெய்யும் மழைநீர் என்னவாகிறது?
2. நமது தெருக்களில் பல மேடு பள்ளங்கள் காணப்படுவதேன்?
3. தண்ணீரோடும் கால்வாய்களினடியில் மணல் இருப்பதேன்?
4. மலைகளில் பெய்யும் மழைநீர் என்னவாகிறது?
5. ஆறுகள் உண்டாகும் விதத்தை விவரி.
6. ஆறானது எங்கு அதிக வேகமாக ஓடுகிறது? எங்கு மெதுவாக ஓடுகிறது?
7. ஆற்று ஜலத்தை ஜனங்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்?
8. ஆற்றோரமுள்ள நிலங்கள் வளமாயிருப்பதற்குக் காரணம் என்ன?

காலபேத அட்டவணை

உங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு அட்டவணை தயாரித்து அதில் காலபேத சம்பந்தமான விஷயங்களைத் தினந்தோறும் குறித்துக்கொண்டு வர வேண்டும். கீழே ஒரு பாடசாலையில் தயாரித்த அட்டவணையின் ஒரு பகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை மாதிரியாகக் கொண்டு எழுதவும்.

வருடம் மாதம்	தேதி	உஷ்ணம்	காற்று வீசும் திசை	ஆகாயத்தின் நிலை	மழை
1939-ஆ நவம்பர்மீ	1	அதிக உஷ்ணம்	வட கிழக்கு	சுத்தம்	மழை இல்லை
	2	மித உஷ்ணம்	வட கிழக்கு	மப்பு மந்தாரம்	சுமாரான மழை
	3	மித உஷ்ணம்	வட கிழக்கு	கரு மேகங்கள்	கனத்த மழை

7. கடலும், கப்பற் பிரயாணமும்

பிள்ளைகளே! நீங்கள் உபயோகிக்கும் ஒவ்வொரு வஸ்துவும் எங்கிருந்து கிடைத்ததென யோசித்துப் பாருங்கள். நீங்கள் எழுதும் பென்சல் பவேரியாவில் செய்யப்பட்டது. காகிதம் கல்கத்தாவில் செய்யப்பட்டது. உடுக்கும் மெல்லிய துணி இங்கிலாந்தில் செய்யப் பட்டது. விளையாடும் சாமான்கள் ஜப்பானில் செய்யப்பட்டவை. கிருஸ்ணாயில் பர்மாவிலிருந்து கிடைக்கிறது. இதைப் போலவே அநேக பொருள்கள் வெளியூர்களிலிருந்து வந்ததாக ஏற்படும். நமது தேசமாகிய இந்தியாவில் செய்யப்படும் சாமான்கள் இரயில் மூலமாக ஒரு ஊரிலிருந்து வேறொரு ஊருக்கு அனுப்பப்படுகின்றன. ஜப்பானிலிருந்து வரும் சாமான்கள் இரயில் மூலமாக வருகின்றனவா? இல்லை. வெளி நாட்டுச் சாமான்களெல்லாம் கப்பல் மூலமாக வருகின்றன.

இங்கிலாந்து, ஜப்பான் முதலான நாடுகள் அநேக ஆயிர மைல் தூரத்திலிருக்கின்றன. அந்த நாடுகளுக்கும் நமது நாட்டுக்கு மிடையே கடல் வியாபித்திருக்கிறது. நிலத்தில் இரயில் வண்டிகள் ஓடுவது போல, கடலில் கப்பல்கள் ஓடுகின்றன. இரயில் வண்டிகள் பல ஸ்டேஷன்களில் தங்கி, ஜனங்களை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. இதைப் போல கப்பல் போகும் வழியில் அநேக துறைமுகங்கள் இருக்கின்றன. இத் துறைமுகங்கள் கடலோரத்திலுள்ள பட்டணங்களில் காணப்படும். நமது மாகாணத்தில் பல துறைமுகங்கள் இருக்கின்றன. இவைகளில் சென்னையிலிருப்பது முக்கியமானது. இவ்விடங்களில் கப்பல்கள் வந்து தங்குவதற்கு வசதி செய்திருக்கிறார்கள்.

இரயில் வண்டிகளைப் போலவே கப்பல்களும் பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றிச் செல்லுகின்றன. கப்பலில் மனிதர் செல்வதற்கும், சாமான் அனுப்புவதற்கும் கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் இக் கட்டணம் இரயில்வே கட்டணத்தை விட மிகவும் குறைவு. கப்பல் இரயிலை விட அதிக பளுவைத் தூக்கிச் செல்லுகிறது.

கப்பலில், இரயில் வண்டியிலிருப்பதுபோல மூன்று வகுப்புகளுண்டு. முதல், இரண்டாவது வகுப்புகளுக்குக் கட்டணம் அதிகம். பிரயாணிகளுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் கப்பலில் காணப்படும். வேண்டிய உணவுப் பொருள் முதலியன வாங்கக் கடைகளிருக்கும். குளிப்பதற்கு அறைகள் காணப்படும். சிறு பிள்ளைகள் விளையாட வசதிகள் இருக்கும். உலாவுவதற்கு இடமிருக்கும். ஒரு கப்பல் ஒருசிறு கிராமம்போலவே காணப்படும்.

இரயில் பிரயாணத்திற்கும் கடல் பிரயாணத்திற்கும் அநேக வித்தியாசங்களுண்டு. இரயில் அடிக்கடி ஸ்டே

கப்பலின் உட்புறம்



1. கப்பல், 2. பிள்ளைகள் விளையாடுமிடம், 3. கடை, 4. ஹால், 5. பெரியோர் விளையாடுமிடம், 6. போஜனசாலை.

ஷன்களில் தங்கி செல்கிறதல்லவா? கப்பல் ஒரு துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டால் அடுத்த துறைமுகத்தை யடைய பல நாட்கள் செல்லும். இரயிலில் போகும்போது பக்கத்திலுள்ள காட்சிகளைப் பார்த்துக் கொண்டே போகலாம். ஆனால், கடலில் கண்ணுக் கெட்டிய தூரம் தண்ணீர் தான் தெரியும். சில சமயங்களில் காற்றடிக்கும் போது அலைகள் மலைகள் போல் உயரும். இதைப் பார்க்கப் பயங்கரமாகவே யிருக்கும். அதிக தூரம் கடலில் பிரயாணம் செய்து தரையிலிறங்கும் போது நமக்கு அதிக சந்தோஷமாகவே யிருக்கும்.

நமது தேசத்துக்கும் இங்கிலாந்து முதலான தேசங்களுக்கும் கப்பல் போக்குவரவு நடைபெறுகிறது. இங்கிருந்து இங்கிலாந்து போக 15 நாட்கள் செல்லும். ஐரோப்பியர் அடிக்கடி கப்பல் பிரயாணம் செய்கின்றனர். நம்மவரிலும் சிலர் வெளி நாடுகளுக்குக் கப்பல் பிரயாணம் செய்கின்றனர். நீங்களும் பெரியவர்களாகும் போது கடல் பிரயாணம் செய்யக் கூடும்.

பயிற்சி

1. நாம் உபயோகிக்கும் சாமான்கள் எங்கெந்த நாடுகளில் செய்யப்பட்டவை?
2. அந் நாடுகளிலிருந்து சாமான்கள் நமது நாட்டுக்கு எப்படி வந்தன?
3. கடல் என்றால் என்ன? நீ கடலைப் பார்த்திருக்கிறாயா?
4. இரயில் பிரயாணத்திற்கும் கப்பல் பிரயாணத்திற்கு மென்ன வித்தியாசம்?
5. கப்பலில் கட்டணம் குறைவா யிருப்பதேன்?
6. துறைமுகம் என்றால் என்ன?
7. கப்பலில் காணப்படும் சில வசதிகளைக் கூறுக.
8. கப்பலை ஒரு சிறு கிராம மென்று கூறலாம். எப்படி?
9. நமது தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு எவ்வாறு செல்லவேண்டும்?

8. கிராமமும் பட்டணமும்

பிள்ளைகளே! நீங்கள் வசிப்பது கிராமமா? பட்டணமா? கிராம மானால் அருகிலுள்ள பட்டணத்தோடு உங்கள் கிராமத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். பட்டணமானால் அருகிலுள்ள ஒரு கிராமத்தோடு உங்கள் பட்டணத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்.

பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வசிக்கு மிடத்திற்குக் கிராமம் என்று பெயர். மனிதர்கள் வாழ்க்கைக்குத் தாவரங்கள் அவசியம் வேண்டும். தாவரங்கள் வளமான இடங்களில் தான் நன்றாய் வளரும். ஆகையால் மனிதர் வளமான நிலமுள்ள இடங்களிலே முதலில் வசிக்க ஆரம்பித்தனர். இங்குக் கிராமங்கள் உண்டாயின.

பட்டணங்களும் முதலில் சிறு கிராமங்களாகவே இருந்தன. ஆனால் இக் கிராமங்களின் இயற்கை அமைப்பு, மற்ற கிராமங்களின் அமைப்பை விட வியாபாரத்திற்கும், தொழிலுக்

கும் ஏற்றதா யிருந்தது. அருகில் தொழிற்சாலைக்கு வேண்டிய பொருள் கிடைத்தன. தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களை வெளியே அனுப்ப சாலைகளும் இருப்புப்பாதைகளும் இருந்தன. இன்னும்இதைப் போன்ற பல வசதிகள் இருந்தமையால் அதிக ஜனங்கள் இங்குக் குடியேற ஆரம்பித்தனர். பிறகு இப்பட்டணங்களில் அரசாங்கத்தார் உத்தியோகசாலைகளை ஏற்படுத்தலாயினர். ஆகவே உத்தியோகத்தின் நிமித்தம் பலர் இங்குக் குடி யேறலாயினர். நாளுக்குநாள் இது விஸ்தீரணத்தில் பெரிதாயிற்று. பெரிய வீடுகளும் மெத்தை மேடைகளும் ஏற்பட்டன. பட்டணத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ள நகரபரிபாலன சபை ஏற்பட்டது. தெருக்கள் அகலமாகவும், நேர்த்தியாகவும், போடப் பட்டன. நாளடைவில் இது தொழிலிலும் வியாபாரத்திலும் விருத்தி யடைந்து பெரிய பட்டணமாயிற்று.

கடற்கரை யோரங்களில் கப்பல் வியாபாரம் நடை பெற வசதியுள்ள இடங்களில் துறை முகங்கள் ஏற்பட்டன. இத் துறைமுகங்க ளிருக்குமிடங்களில் பெரிய நகரங்கள் உண்டாயின. நமது மாகாணத்தின் தலை நகராகிய சென்னைப் பட்டணம் இவ்வாறு ஏற்பட்டதேயாகும்.



கிராமத்தின் தோற்றம்

பிள்ளைகளே! நாம் நகர வாழ்க்கையையும், நாட்டு வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

சுகாதாரம் :—கிராமமே நமது சுகா தாரத்திற் கேற்றது. கிராமத்தில் சுத்தமான காற்று வீசுவதால் நாம் ஆரோக்கியமாக வாழலாம். குடிப்பதற்கு வேண்டிய தண்ணீரும் சுத்தமாகக்கிடைக்கும். அன்று பறித்த காய் கறிகளும், கீரைத் தினுசுகளும் கிடைக்கும். தவிர நல்ல பால், தயிர், நெய் முதலானவைகளும் கிடைக்கும். ஜனங்கள் தம் வீடுகளைத்தோட்டங்களி னடுவே கட்டிச் சுகமாக வாழலாம். வெட்ட வெளிகளில் வசிப்பதாலும் வேலை செய்வதாலும் நமது தேகம் ஆரோக்கியமா யிருக்கிறது.

நகர வாழ்க்கை சுகாதாரத்திற் கேற்றதல்ல. ஜனங்கள் நெருங்கி வசிப்பதால் காற்று அசுத்த மடைகிறது.

அநேக தொழிற்சாலைகள் இருப்பதாலும் காற்று அசுத்த மடைகிறது. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்காது. புதிய காய் கறிகள் கிடைக்காது. ஜனங்கள் காற்றோட்ட மில்லாத ஆபீசுகளிலும், தொழிற் சாலைகளிலும் வேலை செய்வதால் பல வியாதிகளுண்டாகும்.

கைக்கோளர் முதலானவர் ஒவ்வொரு கிராமத்திலு முண்டு. சிலர் ஆடு மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய தொழிலைச் செய்து வருகிறார்கள். ஆடு மாடுகளிலிருந்து பாலைக் கறந்து, பாலைத் தயிர் வெண்ணெய் முதலிய பொருள்களாக்கிப் பட்டணத்தில் விற்று ஜீவிக்கின்றனர்.



பட்டணத்தின் தோற்றம்

தொழில் :—கிராம வாசிகளின் முக்கிய தொழில் பயிர்த் தொழிலேயாகும். நிலத்தைப் பயிரிடும் குடியானவர்களுக்கு வேண்டிய சாமான்களைத் தயாரிக்க ஒவ்வொரு கிராமத்திலும் பல தொழிலாளிகள் இருக்கிறார்கள். தச்சன், கருமான், குயவன், கொல்லன்,

பட்டணங்களில் என்ன தொழில் செய்கிறார்களென்று கவனிப்போம். இங்கு அநேக ஆபீஸ்களும், தொழிற் சாலைகளும், வியாபார ஸ்தலங்களும் இருக்கின்றன. இவ் விடங்களில் அநேகர் உத்தியோகம் செய்கின்றனர். சிலர் வியாபாரம் செய்கின்றனர்.

சிலர் கூலி வேலை செய்து ஜீவிக்கின்றனர். மாட்டு வண்டி ஓட்டுதல், குதிரை வண்டி ஓட்டுதல்; மூட்டை வண்டி இழுத்தல் முதலான பல தொழில்களைச் செய்கின்றனர்.

வாழ்க்கை :—கிராமங்களில் ஜனங்கள் மன நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வசிக்கிறார்கள். கிராமங்களில் சத்தம் அதிகமாயிருக்காது. பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கிவிடுகிறது. உணவுப் பொருள்கள் சொற்ப விலைக்குக் கிடைப்பதால் இவர்கள் சிக்கனமாகவும் வாழ்கின்றனர். தேகத்தைக் கெடுக்கும் காபி ஓட்டல், சினிமா கொட்டகைகள் இங்கு இல்லை. ஆகவே ஜனங்கள் அதி சீக்கிரம் படுத்து அதி காலையில் எழுந்திருக்கிறார்கள். ஆடம்பரமின்றி சாதாரண வாழ்க்கையை நடத்துகின்றனர். ஒருவர்க்கொருவர் உதவி புரிகிறார்கள். ஒருவர் வீட்டில் கலியாணம் நடப்பதாக வைத்துக் கொள்வோம். எல்லோரும் அக்கலியாணத்தை நடத்த உதவி புரிவார்கள். அதைப் போலவே ஒரு வீட்டில் யாராவது இறந்து விட்டால் எல்லோரும் கூட இருந்து அப்பிணத்தை அடக்கம் செய்வார்கள்.

பட்டணத்திலோ ஜனங்கள் மன நிம்மதியில்லாது வாழ் கின்றனர். பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆசை அதிகம். இதனால் இரவு பகலாய் உழைத்துத் தேக சுத்தத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இவர்களது நடத்தையைக் கெடுக்க அநேக சாதனங்கள் இருக்கின்றன. வீண் செலவு செய்ய அநேக வசதிகள் உண்டு. இவர்கள் ஆடம்பரப் பிரியர்களாயிருக்கிறார்கள். வீண் செலவு செய்து கஷ்டப்படுகின்றனர். பட்டணவாசிகளிடம் பரோபகார சிந்தனை அதிகமிராது.

வசதிகள் :—பட்டணங்களில் போக்கு வரவுக்கு நேர்த்தியான ரோட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. போக்கு வரவுக்கு டிராம் வண்டி, மோட்டார் பஸ், ஜட்கா வண்டி, ரிக்ஷா வண்டி முதலான சாதனங்கள் இருக்கின்றன. கல்வி கற்க உயர் தர பாட சாலைகள் இருக்கின்றன. வியாதியை நிவர்த்தி செய்ய அநேக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. நமக்கு வேண்டிய எல்லா சாமான்களும் கிடைக்கக் கூடிய கடைகள் இருக்கின்றன. கிராமங்களில் இவ்வசதிகள் இல்லை யென்றே கூறலாம்.

பயிற்சி

1. கிராமம் என்றால் என்ன?
2. கிராமங்கள் எந்த இடங்களில் உண்டாயின? இதற்குக் காரணமென்ன?
3. சில கிராமங்கள் நாளடைவில் பட்டணமாக மாறியதற்குக் காரணமென்ன?
4. கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசமென்ன? நீ எதை விரும்புவாய்?
5. சுகாதாரத்திற்கு ஏற்றது கிராமமா? பட்டணமா? ஏன்?
6. பட்டணங்களிலுள்ள வசதிகள் எவை?
7. பட்டணங்களில் மனிதருக்குக் கெட்ட பழக்கங்கள் ஏற்படுவதற்குக் காரணமென்ன?
8. கிராம வாசிகளிடம் காணப்படும் சில நற்குணங்களைக் கூறுக.
9. நகர வாசிகளின் தொழில் என்ன? கிராமவாசிகளின் தொழில் என்ன?

9. வியாபாரமும், தொழிற்சாலைகளும்

ஒரு கிராமத்தில் ஜனங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் விளைகிறதா ? இல்லையே. சில தானியங்களே குடிகளுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகக் கிடைக்கிறது. அவர்கள் அதை விலைக்கு விற்று விடுகிறார்கள். அப்பணத்தைக் கொண்டு அவர்களுக்குவேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் வியாபாரம் என்று பெயர். இத் தொழிலைச் செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் வியாபாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் கிராமத்தாருக்கு வேண்டிய பொருள்களை வெளியூர்களிலிருந்து கொண்டு வருகிறார்கள். அவ்வூரில் விளையும் பொருள்களை வாங்கி வெளியூருக்கு அனுப்பி விடுகிறார்கள்.

சந்தைகள் :—பட்டணங்களில் வியாபாரத்திற்காகச் சில ஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக நெல் மண்டி, இரும்புக்கடை, காய் கறிக் கடைகள், மளிகைக் கடைகள்,ஜவுளிக் கடைகள் முதலானவை காணப்படுகின்றன. கிராமங்களில் பெரிய கடைகள் காணப்படா. ஆகவே சில கிராமங்களில் வாரந்தோறும் சந்தை கூடுகிறது. உங்கள் ஊரில் சந்தை கூடுகிறதா ? கூடினால் அச்சந்தைக்குப் போய்ப் பாருங்கள். உங்கள் ஊரில் சந்தை கூடாவிட்டால் சந்தை கூடும் ஊருக்குப் போய்ப் பாருங்கள். கிராமத்தாருக்கு வேண்டிய மளிகை சாமான்கள், துணி, காய் கறிகள் முதலானவை விற்கப்படுகின்றன. பயிரிடும் குடிகள் அடிக்கடி மாடுகளை வாங்கவும் விற்கவும் வேண்டி யிருக்கிறது. இச் சந்தைகளில் அநேக மாடுகளும் விற்பனைக்கு வந்திருக்கும். மாட்டு வியாபாரிகள் பெரிய மாடுகளை இச் சந்தைகளுக்கு ஓட்டி வருவார்கள். குடியானவர்களும் தங்கள் மாடுகளை விற்க வேண்டுமானால் சந்தைக்கு ஓட்டி வருவார்கள். ஆகவே இச்சந்தைகள் பயிரிடும் குடிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

தொழிற் சாலைகள் :—நீங்கள் உபயோகிக்கும் பொருள்களைக் கவனித்துப் பாருங்கள். பேனா, பென்சல், இரப்பர், ஆடை, குடை, சர்க்கரை முதலானவை ஒவ்வொன்றும் எவ்வாறு செய்யப்படுகிறதெனக் கவனியுங்கள். சர்க்கரை கரும்பிலிருந்து செய்கிறார்கள். இதைச் செய்வதற்குக் கரும்பை ஆலையிலிட்டுச் சாறு எடுத்து காய்ச்சி, சர்க்கரை செய்கிறார்கள். இவ்வாறு நிலத்தில் விளையும் கரும்பை சர்க்கரையாக மாற்றுமிடத்திற்குத் தொழிற் சாலை யென்று பெயர். இங்கே அநேகர் வேலை செய்கிறார்கள். இதைப் போலவே நிலத்தில் விளையும் பருத்தியிலிருந்து ஆடை செய்ய தொழிற் சாலை இருக்கிறது. ஆகவே ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை ஜனங்களுக்கு உபயோகப் படும்

பொருள்களாக மாற்ற தொழிற்சாலை கள் வேண்டும். உங்கள் கிராமத்தில் ஏதாகிலும் தொழிற்சாலை இருக்கி றதா? இருந்தால் அங்கு நடக்கும் தொழிலைக் கவனித்துப் பாருங்கள்.

பயிற்சி

1. வியாபாரம் என்றால் என்ன?

2. ஒரு பட்டணத்தில் காணப்படும் வியா பார ஸ்தலங்களைக் கூறுக?

3. சந்தை என்றால் என்ன?

4. சந்தை கூடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

5. தொழிற்சாலை என்றால் என்ன?

6. தொழிற்சாலைகளினால் ஏற்படும் நன் மைகளென்ன?

10. போக்குவரவு சாதனங்கள்

ஆதி காலத்தில் வியாபாரிகள் சாமான்களை மாடுகளின்மீதும்கழுதை களின்மீதும் ஏற்றி ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்து வந்தனர். பின்னர் ஊர்களிடையே சாலைகள் போடப்பட்டன. அப்போது வண்டி களில் சாமான்களை ஏற்றி வியாபாரம் செய்து வந்தனர். கட்டை வண்டிப் பிரயாணம் அதிக காலமாகும். மேலும் சாமான்களை ஏற்றிச் செல்ல அதிக செலவுமாகும். சில இடங் களில் படகுகளின் மூலமாகப் போக்கு வரவு நடந்துவந்தது. படகுகள் காற் றால் தள்ளப்படும்; அல்லது அவை களை ஆட்கள் இழுத்துச் செல்வார் கள். ஆகவே இப் பிரயாணமும் அதிக காலமாகும்.

இக்காலத்தில் துரிதப் பிரயாணத் திற்கு வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இருப்புப் பாதைகள் போடப்பட் டிருக்கின்றன. இருப்புப் பாதையினால் ஏற்பட்ட நன்மைகள்பல. சாமான்களைக் குறைந்த செலவிலும் அதி சீக்கிரத்திலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போக லாம். நாமும் சௌகரியமாகவும் குறைந்த செலவிலும் பிரயாணம் செய்யலாம். திருடர் பயமே கிடை யாது. நிலத்தில் பிரயாணம் செய்ய இருப்புப் பாதைகள் இருப்பதைப் போல் கடலில் பிரயாணம் செய்ய நீராவிக் கப்பல்கள் இருக்கின்றன. இவை பழைய கப்பல்களைப் போல் காற்றை எதிர்பார்ப்பதில்லை. ஆகவே பிரயாணம் துரிதமாக நடக்கிறது. நமக்குக் கிடைக்கும் வெளிநாட்டுப் பொருள்களெல்லாம் நீராவிக் கப்பல் கள் மூலமாகவே கொண்டுவரப் படு கின்றன.

ஆகையால், ஒரு தேசத்தின் வியா பார விருத்திக்குப் போக்குவரவு சாதனங்கள் மிகவும் முக்கியமானவை. நமது நாட்டின் முக்கிய போக்குவரவு சாதனங்களாவன:

(1) சாலைகள்

(2) இருப்புப் பாதைகள்

(3) கால்வாய்கள்

(4) கடல் மார்க்கம்.

பயிற்சி

1. ஆதிகாலத்தில் வியாபாரம் எவ்வாறு நடந்து வந்தது?

2. நமது நாட்டின் முக்கிய போக்கு வரவு சாதனங்கள் எவை?

3. இரயில் பாதை இல்லா ஊர்களில் போக்கு வரவு எவ்வாறு நடைபெறுகிறது?

4. ஆதிகாலத்தில் கப்பல்கள் எவ்வாறு ஓட்டப் பட்டன? இக்காலத்தில் எவ்வாறு ஓட்டப்படுகின்றன?

11. உள்ளூர் விளைபொருள்கள்

பிள்ளைகளே! உங்கள் கிராமத்திலுள்ள நிலத்தைக் கவனித்துப்பாருங்கள். சில நிலங்களில் ஏரிகளிலிருந்தோ அல்லது ஆறுகளிலிருந்தோ நீர் பாய்ச்சப்படுகிறது. இவை வளமான நிலங்கள். இவைகளுக்கு நன்செய் நிலங்கள் என்று பெயர். சில நிலங்கள் மேடான இடத்தில் காணப்படும். இவைகளுக்கு மழை பெய்தால்தான் தண்ணீர் கிடைக்கும். இவைகளுக்குப் புன்செய் நிலங்கள் என்று பெயர். இவைகளைத் தவிர வீட்டுத் தோட்டங்கள் மிகவும் செழிப்பா யிருக்கும். இவைகளுக்கு ஏரித் தண்ணீரையோ அல்லது கிணற்று நீரையோ பாய்ச்சுவார்கள்.

நன்செயில் நெல், கரும்பு முதலியன விசேஷமாகப் பயிரிடுவார்கள். புன்செயில் கம்பு, ராகி, சோளம், வேர்க்கடலை, தினை, வரகு முதலானவைப் பயிரிடுவார்கள். தோட்டக்கால்களில் காய் கறிகள், வாழை, புகையிலை, வெற்றிலை, மஞ்சள் முதலானவை பயிரிடுவார்கள்.

உங்கள் கிராமத்தில் நன்செய் அதிகமா? புன்செய் அதிகமா? நன்செயில் என்ன பயிரிடுகிறார்கள்? புன்செயில் என்னென்ன பயிர் செய்கிறார்கள்? உங்கள் தோட்டங்களில் என்னென்ன காய் கறிகளைப் பயிரிடுகிறார்கள்? நீங்கள் சுற்றிப்பார்த்து இப்பயிர்களை எப்போது பயிரிடுகிறார்களென்றும், எப்போது அறுவடை செய்கிறார்களென்றும் கவனித்து அடியிற் காட்டியபடி குறிப் பெழுதுங்கள்.

மாதத்தின் பெயர்	பயிரிடப்படும் பயிர்கள்	அறுவடையாகும் பயிர்கள்	கிடைக்கும் காய்கறிகள்

சேலம் ஜில்லா
எல்லைகள்,
தாலூகாக்கள்
மைசூர் ராஜ்யம்
ஹொசூர் தாலூகா
பா ல கா ட்
கிருஷ்ணகிரி
தாலூகா
வட ஆர்க்காடு ஜில்லா
ஹரூர்
பா ரா ம ஹா ல்
தாலூகா
தர்மபுரி தாலூகா
தென் ஆர்க்காடு ஜில்லா
ஓமலூர் தாலூகா
சேலம்
தாலூகா
த ல கா ட்
ஆத்தூர்
தாலூகா
கோயமுத்தூர் ஜில்லா
திருச்செங்கோடு
தாலூகா
நாமக்கல் தாலூகா
திருச்சிராப்பள்ளி
ஜில்லா
S.V.V.

சேலம் ஜில்லா

1. இயற்கையமைப்பு

நமது ஜில்லாவின் படத்தைப்பாருங்கள். அரசாட்சியின் நிமித்தம் நமது ஜில்லாவை ஒன்பது தாலூகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:

(1) ஹொசூர் தாலூகா, (2) கிருஷ்ணகிரி தாலூகா, (3) தர்மபுரி தாலூகா, (4) ஹரூர் தாலூகா, (5) ஓமலூர் தாலூகா, (6) சேலம் தாலூகா, (7) ஆத்தூர் தாலூகா, (8) திருச்செங்கோடு தாலூகா, (9) நாமக்கல் தாலூகா. இது தெற்கு வடக்காக அதிக நீளம் வியாபித்திருக்கிறது. இதன் விஸ்தீரணம் சுமார் 6300 சதுர மைல்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

1. எல்லைகள்

நமது ஜில்லாவின் நான்கு பக்கங்களிலும் நிலமே எல்லையா யிருக்கிறது. எப்பாகத்திலும் கடல் இல்லை. ஆகையால் இது ஒரு உள் நாட்டு ஜில்லாவாகும். வடக்கில் மைசூர் ராஜ்யமும், கிழக்கில் தென் ஆற்காடு ஜில்லாவும், வட ஆற்காடு ஜில்லாவும், எல்லைகளா யிருக்கின்றன. தெற்கில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவும், மேற்கில் மைசூர் ராஜ்யமும், கோயமுத்தூர் ஜில்லாவும் எல்லைகளாயிருக்கின்றன.

2. இயற்கை அமைப்பு

நமது ஜில்லாவின் இயற்கை அமைப்பைப்பற்றித் தெரிந்து கொள்வோம். இந்த ஜில்லாவின் வடமேற்குப் பாகம் மிகவும் உயரமாயிருக்கிறது. இது மைசூர் பீடபூமியின் சரிவாகும். இதற்குப் பாலகாட் என்று பெயர். இப்பிரதேசம் கடல் மட்டத்திற்குமேல் சராசரி 3000 அடி உயரம் உள்ளது. பாலகாட் பிரதேசத்தில் ஹொசூர் தாலூகாவும், கிருஷ்ணகிரி தாலூகாவின் வடமேற்குப் பாகமும் சேர்ந்துள்ளன.

மத்திய பாகத்திற்கு பாராமஹால் எனப் பெயர். இது சராசரி 1300 அடி உயர முள்ளது. இப் பிரதேசத்தில் கிருஷ்ணகிரி தாலூகாவின் தென் பாதியும், தர்மபுரி தாலூகாவும், ஹரூர் தாலூகாவும் அடங்கியுள்ளன. இங்குப் பல குன்றுகள் காணப்படுகின்றன. இங்குள்ள சேர்வராயன் மலையின் உயரம் சுமார் 4500 அடி.

மூன்றாவதாக, தலகாட் இயற்கைப் பிரதேசத்தில், சேலம், ஓமலூர், ஆத்தூர், திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்கள் இருக்கின்றன. இப்பிரதேசமே சேலம் ஜில்லாவில் சமவெளி என்று சொல்லலாம்.

எனவே நமது ஜில்லாவைப் (1) பாலகாட், (2) பாராமஹால், (3) தல


சேலம் ஜில்லா
மலைகள், ஆறுகள்
மார்க்கண்ட நதி
மகாராஜகடை
தென்பெண்ணை நதி
சனத் குமார நதி
ராயக்கோட்டை மலைகள்
மேலகிரிமலைகள்
காவிரியாறு
ஹொகனகல் நீர்விழ்ச்சி
பாலாறு
தொப்பூர் ஆறு
கம்பைநல்லூர் ஆறு
கல்ராயன் மலை
மேட்டூர் தேக்கம்
மேட்டூர் அணை
சேர்வராயன் மலை
சரபங்க நதி
வசிஷ்ட நதி
சுவேத நதி
பச்சை மலை
சங்ககிரி
காவிரியாறு
திருமணிமுத்தாறு
கொல்லி மலை
காவிரியாறு
மலைகள்
ஆறுகள்
S.V.V.

காட் என்ற மூன்று இயற்கைப் பிரிவு களாகப் பிரிக்கலாம்.

3. மலைகள்

இந்த ஜில்லாவில் பல மலைகளும், குன்றுகளும் இருப்பதைப் படத்தில் பாருங்கள். அவைகளைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

சேர்வராயன் மலை.—இது இந்த ஜில்லாவிலுள்ள மலைகளில் மிகவும் உயரமானது. இதன் உயரம் சுமார் 4500 அடி. இதன் அடிவாரம் சேலம் டவுனிலிருந்து 10 மைல் தூரத்தி லிருக்கிறது. இம்மலையின் மேல் பிர தேசம் மிக குளிர்ச்சியாக இருக்கிறது. இம் மலையுச்சியிலுள்ள ஏர்க்காடு என்ற ஊரில் ஐரோப்பியர்கள் வசிக்கி ருர்கள். இது ஒரு சுகவாச ஸ்த லம். வேனிற் காலத்தில் தனவந்தர் கள் இங்குச் சென்று சுகமாக வசிக் கிருர்கள்.

அங்குசகிரி:—இது ஹொசூர் தாலூ காவின் வட கிழக்கில் இருக்கிறது. இது பார்ப்பதற்கு அங்குசத்தைப் போலிருப்பதால் அப்பெயர் உண்டா யிற்று.

மேல கிரி:— இது தர்மபுரி, ஹொசூர் தாலூகாக்களில் வியாபித்திருக்கிறது.

கல் ராயன் மலைகள்.—இவை நமது ஜில்லாவில் ஆத்தூர், ஹரூர் தாலூ காக்களில் வியாபித் திருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவிலும் இவை பரவி யுள்ளன. அம் மலைகளின் நீளம் சுமார் 17 மைல்.

மகாராஜ கடைமலைகள்.—இவை ஹொ சூர், கிருஷ்ணகிரி தாலூகாக்களில் பரவி இருக்கின்றன.

கொல்லிமலை:—இது நாமக்கல் தாலூ காவுக்கும் திருச்சி ஜில்லாவுக்கும் மத் தியில் எல்லையோரத்தில் இருக்கிறது. இதன் உயரம் சுமார் 4000 அடி.

பச்சை மலை :—இது ஆத்தூர் தாலூ காவுக்கும் திருச்சி ஜில்லாவுக்கும் மத் தியில் எல்லையோரத்தில் உள்ளது இதன் உயரம் சராசரி 3800 அடி.

இராயக் கோட்டை மலைகள்.—இவை பல குன்றுகளின் கூட்டம். இக் கூட்டம் கிருஷ்ணகிரி தாலூகாவின் மேற்குப் பாகத்தில் இருக்கின்றன.

மேலே கூறியவைகளைத் தவிர, இந்த ஜில்லாவில் சங்ககிரி, திருச் செங்கோடு, கஞ்சமலை, ஜெருகுமலை, போதமலை என்ற மிகச் சிறிய குன்று களும் இருக்கின்றன.

இந்த ஜில்லாவின் மலைகள் எல் லாம் கிழக்குத் தொடர்ச்சி மலையின் பிரிவுகளே. முன் காலத்து அரசர் கள் சில மலைகளின் மேல் பலமான கோட்டைகளைக் கட்டிக் கொண்டு வசித்து வந்ததாகத் தெரிகிறது. இன் றும் அங்கே சில கோட்டைகளைக் காணலாம். அவையாவன: இராயக் கோட்டை, சங்ககிரி, கிருஷ்ணகிரி முதலியன.

ஹொசூர், தர்மபுரி, ஹரூர் தாலூ காக்களில் உள்ள மலைகளைச் சுற்றி விஸ்தாரமான காடுகள் இருக்கின் றன. அக்காடுகளில் புளிய மரங்க ளும், மூங்கிலும் விசேஷமாகக் காணப்படுகின்றன.

சேலம் ஜில்லாவின் மத்திய பாகத் திலுள்ள சேர்வராயன் மலைகளிலி ருந்தே நமது ஜில்லா நதிகள் அநே

கமாய் உற்பத்தியாகின்றன. வேறு இடங்களில் உற்பத்தி யாகும் சில நதிகளும் இங்குப் பாய்கின்றன.

பயிற்சி

1. சேலம் ஜில்லாவின் எல்லைகளைக் கூறுக.

2. இந்த ஜில்லாவை உள்நாட்டு ஜில்லாவென்று கூறுவதற்குக் காரணமென்ன ?

3. இந்த ஜில்லாவை இயற்கை யமைப்பின்படி எவ்வாறு பிரிக்கலாம் ?

4. எப்பாகங்களில் மலைகள் காணப்படுகின்றன ? இவைகளில் உயரமான மலை எது?

5. அங்குசகிரி எங்கிருக்கிறது ? இதற்கு இப் பெயர் வந்ததின் காரணம் என்ன ?

6. எந்த மலைகளில் பழைய கோட்டைகள் காணப்படுகின்றன ?

7. நமது ஜில்லாவின் படம் வரைந்து அதில் (1) எல்லைகள் (2) மலைகள் (3) இயற்கைப் பிரிவுகள் முதலியவற்றைக் குறிப்பிடுக.

2. நதிகள்

காவிரி நதி :—இது மேற்குத் தொடர்ச்சி மலையின் பிரிவாகிய குடகுமலையில் உற்பத்தியாகிறது. மைசூர் ராஜ்யத்தின் வழியாய் ஓடி, பிறகு இந்த ஜில்லாவின் வடமேற்கு எல்லையாக ஓடுகிறது. இது மேட்டூருக் கருகில் நேர் தெற்காகத் திரும்பிப் பாய்கிறது. இந்துக்கள் இதை ஒரு புண்ய நதியாகக் கொண்டாடுகின்றனர். நாமக்கல் தாலூகாவின் மேற்குப் பாகத்தில் இந் நதியால் சிறிது நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. இதன் முக்கிய உபநதிகள் :— தொப்பூர் ஆறு, சரபங்க நதி, சனத்குமார நதி, திருமணி முத்தாறு என்பன.

சென்னை அரசாங்கத்தார் மேட்டூருக்கு அருகில் காவிரியின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டியிருக்கிறார்கள். அதன் பெயர் மேட்டூர் அணை ; இவ்வுலகத்திலுள்ள மிகப் பெரிய அணைகளில் இது ஒன்றாகும்.

மேட்டூர் தேக்கத்தின் உதவியால் தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளுக்கு மிகுந்த நன்மையுண்டு. மேட்டூர் அணை சேலம் டவுனிலிருந்து 26 மைல் தூரத்தில் உள்ளது.

தொப்பூர் ஆறு :—இது சேர்வ ராயன் மலையின் மேற்கு அடிவாரத்தில் தோன்றி, ஓமலூர் தர்மபுரி தாலூகாக்களின் வழியாக ஓடி காவிரியில் கலக்கிறது. இது கலக்கும் இடத்திற்குச் சற்றுத் தெற்கே மேட்டூர் அணை இருக்கிறது. இதற்குப் பாலாறு என்ற ஒரு சிறிய உபநதி உண்டு.

சரபங்க நதி :—இதுவும் சேர்வராயன் மலையின் மேற்கு அடிவாரத்தில் தோன்றி, ஓமலூர் தாலூகாவின்மத்தியில் பாய்ந்து காவிரியில் கலக்கிறது. இந் நதியில் மழை பெய்தால்தான் ஜலம் இருக்கும்.

சனத் குமார நதி :—இது ஹொசூர் தாலூகாவில் உற்பத்தியாகித் தர்மபுரி தாலூகாவின் மேற்குப்பாகத்தில் பாய்ந்து காவிரியில் கலக்கிறது. இது கலக்குமிடத்தில் ஓர் நீர்வீழ்ச்சியாக விழுகிறது. இதற்கு ஹொகனகல் நீர்வீழ்ச்சி எனப் பெயர்.

திருமணி முத்தாறு :—இது சேர்வராயன் மலையில் தோன்றுகிறது. சேலம்

நகரின் மத்தியில் ஓடுவது இந் நதியே. இந்த ஆற்றில் ஓடும் தண்ணீர் குடிப்பதற் கேற்றதல்ல. இது காவிரியில் கலக்குமிடத்தில் சிறிது விவசாயத்திற்கு உபயோகப்படுகிறது.

தென்பெண்ணையாறு :—நமது ஜில்லாவில் காவிரிக்கு அடுத்தபடி முக்கிய ஆறு இதுவேயாகும். இது மைசூர் ராஜ்யத்தில் தோன்றி, ஹொசூர், கிருஷ்ணகிரி, ஹரூர் தாலூகாக்கள் வழியாகத் தென்கிழக்காகப் பாய்ந்து வட ஆற்காடு ஜில்லாவில் பிரவேசிக்கிறது இந் நதியின் நீரால் விவசாயம் நன்கு நடைபெறுகிறது. இந் நதியின் இரு கரைகளிலும் பல தென்னந் தோப்புகளும், பாக்குத் தோப்புகளும் காணப்படும். இதன் முக்கிய உபநதிகள்: மார்க்கண்ட நதி, பாம்பாறு, கம்பை நல்லூர் ஆறு, வாணியாறு.

மார்க்கண்ட நதி:-இது மைசூர் ராஜ்யத்தில் தோன்றி அங்குச கிரிக்கும் மகாராஜகடை மலைக்கும் இடையில் பாய்ந்து, கிருஷ்ண கிரிக்கு அருகில் தென்பெண்ணை யாற்றில் கலக்கிறது.

கம்பை நல்லூர் நதி :—தர்மபுரி தாலூகாவில் தோன்றி ஹரூர் தாலூகாவில் பாய்ந்து, தென்பெண்ணையில் கலக்கிறது. இது பாயும் பிரதேசம் மேட்டுப் பாங்கானது.

பாம்பாறு :—இந்நதி கிருஷ்ணகிரி, ஹரூர் தாலூகாக்களில் பாய்ந்து தென் பெண்ணையில் கலக்கிறது. இதன் நீரால் குளங்கள் நிரப்பப்படுகின்றன.

வாணியாறு :—இது சேர்வராயன் மலையில்தோன்றி, ஹரூர் தாலூகாவில் பாய்ந்து அங்கேயே தென் பெண்ணையில் கலக்கிறது. ஹரூர் இதன் இடது கரையில் இருக்கிறது.

சுவேத நதி :—இந் நதி கொல்லி மலையில் உற்பத்தியாகிறது. பச்சை மலையின் வடசரிவில் பெய்யும் மழை ஜலமும் இதில் வந்து சேருகிறது. இது பாயும் பிரதேசம் மிகவும் செழிப்பானது.

வசிஷ்ட நதி :—இது கல்ராயன் மலையில் தோன்றி, ஆத்தூர் தாலூகாவின் மத்திய பாகத்தில் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. இந் நதியால் நன்செய் சாகுபடி அதிகமாய் நடக்கிறது. அதன் கரையில் பல செழிப்பான கிராமங்கள் இருக்கின்றன.

வசிஷ்ட நதியும், சுவேத நதியும் தென் ஆற்காடு ஜில்லாவில் பிரவேசித்து வெள்ளாறு என்ற பெயருடன் ஓடி வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது.

பயிற்சி

1. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய நதிகளைக் கூறுக.
2. ஆறுகளெல்லாம் எத்திசையை நோக்கி ஓடுகின்றன ? இதற்குக் காரணம் என்ன ?
3. ஏர்க்காடு மலையில் உற்பத்தியாகும் நதிகளைக் கூறுக.
4. காவிரியில் எந்த இடத்தில் பெரிய அணைகட்டி இருக்கிறார்கள்? இந்த அணையைப்பற்றி உனக்குத் தெரிந்ததை எழுதுக.
5. நமது ஜில்லாவில் நீர் வீழ்ச்சி எங்கிருக்கிறது ?
6. ஆத்தூர் தாலூகா நீர்வளம் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன ?
7. சேலம் ஜில்லாவின் படம் வரைந்து அதில் பாயும் முக்கிய நதிகளை நீலநிறக் கோட்டினால் காட்டுக. அந் நதியால் நீர்ப்பாசனம் ஏற்படுமிடங்களைப் பச்சை நிறத்தினால் காட்டுக.

சேலம் ஜில்லா
விளைபொருள்கள்
பாக்கு மரம்
பட்டு
கம்பு
தென்னை
ஆரஞ்சு
ராகி
திராக்ஷை
சோளம்
எள்
துவரை
ராகி
கம்பு
கரும்பு
கொள்ளு
கம்பு
கற்சட்டி
ராகி
காப்பி
ரப்பர்
கொள்ளு
மாமரம்
கரும்பு
நிலக்கடலை
பருத்தி
புகையிலை
தென்னை
கரும்பு
புகையிலை
வாழை
வெற்றிலை
நெல்
S.V.V.

3. விளைபொருள்கள்

நமது ஜில்லாவின் நிலவளத்தை தையும் நீர்வளத்தையும் கவனித்துப் பாருங்கள். ஆற்றோரங்களிலும், சம வெளிகளிலும் நிலம் வளமுடையதா யிருக்கும். மலையடி வாரங்களிலும் மேட்டுப் பாங்கான இடங்களிலும் நிலம் வளமாயிரா. நிலவளத்தைஅநு சரித்து அவைகளை நன் செய் என்றும், புன் செய் என்றும், தோட்டக் கால் என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

ஒரு நாட்டின் விளைபொருள்கள் அவ்விடத்தின் நிலவளம், நீர்வளம், சீதோஷ்ணம் முதலியவைகளைப் பொறுத்ததாகும்.

நெல் :—இந்த ஜில்லாவில் நாமக்கல், ஆத்தூர், சேலம் ஆகிய தாலூகாக்களில் நெல் பயிராகிறது. ஆனால் அந்த நெல் உண்பதற்கு அவ்வளவு சிறந்தது அல்ல.

கரும்பு :—ஆத்தூர் தாலூகாவிலும், நாமக்கல் தாலூகாவின் வட பாகத்திலும் விசேஷமாய்ப் பயிராகின்றது.

வெற்றிலை :—நாமக்கல் தாலூகாவில் காவிரியின் கரையில் நன்கு பயிரிடப் படுகிறது.

கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஹரூர், ஆத்தூர் முதலான தாலூகாக்களில் கம்பும், இதர சில புன்செய் தானியங்களும் பயிராகின்றன. சோளம் திருச்செங்கோடு தாலூகாவில் விசேஷமாய்ப் பயிராகிறது. நமது ஜில்லாவின் மேட்டு நிலங்களில் தினை, சாமை முதலியன பயிராகின்றன.

ஹரூர் தாலூக்காவில் துவரைப் பயிர் விசேஷம். இச்சில்லாவில் பல பாகங்களிலும் கொள்ளு பயிராகிறது. பருத்தி, புகையிலை திருச்செங்கோடு ஆத்தூர் தாலூகாக்களில் விளைகின்றன.

கிருஷ்ணகிரி, ஆத்தூர், தாலூகாக்களில் ஆறுகளின் இரு கரைகளிலும் தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் ஏராளமாய்க் காணப்படுகின்றன.

சேலம் தாலூகாவில் பயிராகும் மாம்பழங்களும், கிருஷ்ணகிரி தாலூகாவில் விளையும் கிச்சிலியும் (ஆரஞ்), சேர்வராயன் மலையில் உண்டாகும் பழவகைகளும் சிறந்தவை. சேர்வராயன் மலையின் சாரலில் காப்பி பயிரிடப் படுகிறது.

நமது ஜில்லா மலைகளடர்ந்தது. ஆதலால் இம் மலைகளை யடுத்த காடுகளில் தேக்கு, வேங்கை, சந்தனமரம், மூங்கில், புளி முதலிய மரங்களும், இன்னும் விறகுக்கு உபயோகமான மரங்களும் வளருகின்றன.

பயிற்சி

1. நன்செய், புன்செய் என்றால் என்ன ?
2. இந்த ஜில்லாவின் முக்கிய நன்செய்ப் பயிர்கள் யாவை ?
3. நமது ஜில்லாவில் பயிராகும் முக்கிய புன்செய்த் தானியங்சள் வைவை ?
4. புகையிலை எத்தாலூக்காக்களில் பயிராகிறது ?
5. சேர்வராயன் மலையின் விளை பொருள்களைக் கூறு?
6. பருத்தி எத்தாலூகாவில் பயிராகிறது?

4. கைத்தொழிலும் வியாபாரமும்

சேலம் ஜில்லாவின் முக்கிய கைத் தொழில் விவசாயமே. அதற்கு அடுத்த படியாக நெசவுத் தொழில் அதிகமாய் நடை பெறுகிறது. சேலம் தாலூகாவில் பட்டு நெசவும், ஓமலூர், ராசிபுரம், திருச்செங்கோடு முதலிய ஊர்களில் பருத்தி நெசவும் அதிகம். நாமக்கல்லிலும், சேலத்திலும் கம்பள நெசவு உண்டு. கம்பள நெசவுத் தொழில் செய்வர் குறும்பர் எனப் படுவர். சௌராஷ்டிரர்கள் பட்டுத் தொழிலிலும், ஜரிகை வேலையிலும் கை தேர்ந்தவர்கள். தேவாங்க ஜாதியினர் நூலுக்குச் சாயமேற்றி புடவைகள் நெய்து வருகிறார்கள். கத்தர் திருச்செங்கோட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. கச்சிப் பாளையத்திலும், சேலத்திலும் தோல் பதனிட்டு வருகிறார்கள். சேலம் மத்திய சிறைச் சாலையில் ஜமக்காளங்கள் நேர்த்தியாக நெய்கிறார்கள்.

எடப்பாடியிலும், ஆத்தூரிலும் நேர்த்தியான கற்சட்டிகள் செய்கிறார்கள். ராசிபுரத்தில் பித்தளைப் பாத்திரங்களும், அரக்கு வளையல்களும் செய்யப் படுகின்றன. இந்த ஜில்லாவின் பல பாகங்களில் மண்பாண்டம், சிற்ப வேலை, எண்ணெய் ஆட்டுதல் முதலியன நடை பெறுகின்றன.

கரும்பு விளையும் இடங்களில் வெல்லம் செய்யப்படுகிறது. கயிறு, பாய் முதலியனவும் செய்யப்படுகின்றன.

நமது ஜில்லாவின் முக்கிய ஏற்றுமதி

கிச்சிலி, மாம்பழம், தோல், பீங்கான் சாமான்கள், காப்பி, பட்டுத் துணி, கற்சட்டி, திராக்ஷை, எள், துவரை, மிளகாய், வெல்லம், பருத்தி ஒட்டு மாஞ்செடிகள் முதலியன ஏற்றுமதியாகின்றன.

இந்த ஜில்லாவின் முக்கிய இறக்குமதி

மண் எண்ணெய், பெட்ரோல், கண்ணாடிச் சாமான், இரும்புச் சாமான்கள், மோட்டார் கார், யந்திரங்கள், மின்சார விளக்குகள், காகிதம், சீமை ஜவுளி, நூல், ஜரிகை, செம்பு பித்தளைத் தகடுகள் முதலியன.

பயிற்சி

1. துணி நெசவு இந்த ஜில்லாவில் எங்கே நடை பெறுகிறது? பட்டு நெய்தல் எங்கு விசேஷம்?

2. ஏற்றுமதி, இறக்குமதி என்றால் என்ன?

3. இந்த ஜில்லாவிலிருந்து என்னென்ன பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

4. நமது ஜில்லாவின் முக்கிய இறக்குமதிப் பொருள்களைக் கூறு.

5. முக்கிய பட்டணங்கள்

1. சேலம் தாலூகா

சேலம்:—இந் நகர் சேலம் ஜில்லாவுக்கும், சேலம் தாலூகாவுக்கும் தலைமைப் பட்டணம். இந் நகரின் நடுப்பாகத்தில் திருமணி முத்தாறு பாய்கிறது. இந்த ஆற்றின் வலது கரையில் இருப்பதற்குச் செவ்வாய்ப் பேட்டை எனவும், இடது கரையில்

இருப்பதற்குச் சேலம்டவுன் என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. செவ்



சேலம் கடைத்தெரு

வாய்க் கிழமையன்று செவ்வாய்ப் பேட்டையில் மிகப் பெரிய சந்தை கூடுகிறது. இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம்.

சேலம் நகரில் ஒரு இரண்டாந்தர காலேஜும், ஐந்து ஹைஸ்கூல்களும்,



சேலம் காலேஜ்

முனிசிபல் ஆபீஸ், பெரியபள்ளிவாசல், பல கோவில்கள், ஜில்லா ஆபீஸ்கள், கோர்ட்டுகள் முதலியனவும் இருக்கின்றன. நகரின் சுற்றுப் புறங்களில் அநேக சிறு குன்றுகள் காணப்படும். ஆகையால் இங்கு உஷ்ணம் அதிகமாய் இருக்கிறது. சேலம் ஜங்ஷன் முனிசிபல் எல்லைக்கு 3 மைல் தூரத்திலிருக்கிறது. இந் நகரில் சேலம் மார்க்கெட், சேலம் டவுன், கிழக்கு சேலம் என்ற மூன்று ரயில்வே ஸ்டேஷன்கள் உண்டு. இப் பட்டணத்திலிருந்து பட்டு வேஷ்டிகளும், நிலக்கடலையும் ஏராளமாய் ஏற்றுமதியாகின்றன. மேட்டூர் அணையிலிருந்து



சேலம் தேர் (ஈஸ்வரர் கோவில்)

குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. இங்குள்ள சிவனேஸ்வரர் கோவில் தேர் மிகப் பிரசித்தமானது

ஏர்க்காடு :—இவ்வூர் சேர்வராயன் மலைமீதுள்ளது. இது சேலத்திலிருந்து 14 மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஒரு சுகவாசஸ்தலம்.



ஏர்க்காடு தோற்றம்

இந்த ஊருக்கு அருகில் ஒரு ஏரியும் ஒரு புற்காடும் உள்ளதால் அதற்கு இப் பெயர் வந்தது. இதன் சுற்றுப் புறங்களில் காப்பி விளைகிறது.

மல்லூர்:— இது சேலத்திலிருந்து நாமக்கல்லுக்குச் செல்லும் சாலையில் உள்ளது. இங்குப் பஞ்சாயத்து போர்டு ஆபீஸ் இருக்கிறது. இவ்விடத்தில் பொரி வறுக்கப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

அயோத்யா பட்டணம் :—இது சேலத்திலிருந்து கிழக்கே 5 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூர் வழியாக ஸ்ரீ ராமர் இலங்கைக்குச் சென்றுர் எனக் கூறுகின்றனர். அதற்கேற்ப இங்கு ஒரு ஸ்ரீ ராமர் கோவில் இருக்கிறது. ஊரைச்சுற்றி தென்னந் தோப்புகள் விசேஷம்.

சூர மங்கலம் :—இது சேலம் ஜங்ஷனை அடுத்தாற்போல் உள்ள ஒரு பெரிய கிராமம். இங்கு ரயில்வே உத்தியோகஸ்தர்களின் பங்களாக்கள் இருக்கின்றன. வெளி ஜில்லாக்களிலிருந்து ஏர்க்காட்டுக்குச் செல்லுகிறவர்கள், இங்கு இறங்கிப் போகிருர்கள்.

சூரமங்கலத்திற்கு வடக்கிலுள்ள குன்று ஒன்றில் சுண்ணும்புக்கல் அகப்படுகிறது. அது மாக்னிஸைட் எனப்படும். ஒரு கம்பனியார் அச் சுண்ணும்பால் பீங்கான் பாத்திரங்கள் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தியுள்ளனர். ஏர்க்காட்டில் விளையும்பொருள்களும், அப் பீங்கான்களும் சூரமங்கலம் ஸ்டேஷனிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

2. ஓமலூர் தாலூகா

ஓமலூர் :—இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு பஞ்சாயத்து போர்டு ஆபீஸ், தாலூகா ஆபீஸ், சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ், ஒரு நடுத்தர பாடசாலை முதலியன உள்ளன. சேலத்திலிருந்து தர்மபுரிக்குச்செல்லும் பாதையில் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குத் துணி நெசவும், தானிய வியாபாரமும் அதிகம்.

மேச்சேரி :—ஓமலூருக்கும் இதற்கும் 10 மைல் தூரம். இது பெரிய வியாபார ஸ்தலம். இங்கு வாரச் சந்தை கூடுகிறது. மேச்சேரி ரோட் என்ற ரயில்வே ஸ்டேஷன் இவ்வூருக்குச் சமீபத்திலிருக்கிறது. இவ்வூரில் கற்சட்டிகள் செய்யப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மேட்டூர் அணை:—இது சேலத்தி லிருந்து 26-மைல் தூரத்தில் இருக் கிறது. இங்கிருந்து கோயமுத்தூர்,



மேட்டூர் அணை

பெங்களூர், சென்னை, முதலிய இடங் களுக்கு வசதியான ரஸ்தாக்கள் போ கின்றன. சேலம் ஜங்ஷனிலிருந்து இவ்வூர்வரை ஒரு கிளை ரயில்பாதை போடப்பட்டிருக்கிறது. அணைக்கு



மேட்டூர் வளைவுப் பாலம்

அருகில் உள்ள வளைவுப்பாலம் பார்க் கத் தகுந்தது.

தாரமங்கலம்:—இது ஓமலூரி லிருந்து 5 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் தேவாங்கர் வகுப்பினர் விசேஷமாய் வசிக்கிறார்கள். எனவே இங்கு நெசவுத் தொழில் அதிகம். தாரமங்கலத்திலுள்ள சிவன் கோவில், தெப்பகுளம், ஆயிரக்கால் மண்டபம் முதலியன பார்க்கத் தகுந்தவை.

ஜலகண்டபுரம்:—இவ்வூரிலும்தேவாங் கர்கள் அதிகம். அவர்கள் ஏராள மாய் நெசவுத்தொழில் புரிகின்றனர். இவ்விடத்திலிருந்து பனைவெல்லம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நங்கவல்லி:—இது ஓமலூருக்குத் தென் மேற்கில் உள்ள ஒரு கிராமம். இங்குப் பிரசித்தி பெற்ற நரசிம்ம சுவாமி கோவில் உள்ளது.

அமரகுந்தி:—முன்பு ஒரு காலத்தில் இது பெரிய நகரமாய் விளங்கிற்று.

இவ்வூரில் பல கோவில்களைக் காண லாம்.

3. தர்மபுரி தாலூகா

தர்மபுரி :—இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இது ஒரு முக்கிய ரயில்வே ஸ்டேஷன். இவ்வூரில் ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கு எண்ணெய் ஆட்டுதலும், நெசவுத் தொழிலும் அதிகமாய் நடைபெறுகிறது. இத் தாலூகாவில் இது பெரிய வியாபார ஸ்தலம்.

இவ் வூருக்குப் பக்கத்தில் சர் தாமஸ் மன்ரோ காலத்தில் வெட்டப்பட்ட ஒரு குளம் உண்டு. அங்குள்ள பீடமும், தூணும் அவருடைய ஞாபகார்த்த சின்னங்கள் ஆகும்.

பென்னகரம் :—இது தர்மபுரிக்கு மேற்கே 18 மைல் தூரத்தில் உள்ள ஒரு பெரிய கிராமம். இவ் வூரைச் சுற்றியுள்ள காடுகளில் மூங்கில், கடுக்காய், ஆவாரம்பட்டை, தேன், புளி முதலிய மலைச் சரக்குகள் அதிகமாய்க் கிடைக்கின்றன. இங்குள்ளவர்களில் பலர் மூங்கிற் பாய் பின்னும் தொழில் செய்கிறார்கள்.

தொப்பூர் :—இதற்கு அருகில் தொப்பூர் ஆறும், தொப்பூர் கணவாயும் உள்ளன. இது சரித்திர சம்பந்தமான ஊர். இங்கு ஒரு பெரிய சத்திரம் இருக்கிறது. இது மைசூர் அரசரால் கட்டப்பட்டது.

பாலக்கோடு:—இது புளி வியாபாரத்திற்கும், ஜோடுகளுக்கும், தென்னை நார், பனை நார் முதலியவைகளுக்கும் பெயர் பெற்றது. இது சந்தை கூடுமிடம்.

பெரும்பாலை :— இது பாலாற்றின் கரையில் இருக்கிற ஒரு பெரிய கிராமம். இங்கு இரும்புக் கரண்டிகள், வாணற்சட்டி, அரிவாமணை முதலியன செய்யப்பட்டு வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

ஹொகனக்கல் :—இது சனத் குமார நதி காவிரியில் சங்கமமாகும் இடத்தில் இருக்கிறது. இவ்வூருக்கு அருகில் ஹொகனக்கல் என்ற நீர் வீழ்ச்சியைக் காணலாம். ஜனங்கள் ஐப்பசி மாதத்தில் இங்கு வந்து காவிரியில் ஸ்நானம் செய்கிறார்கள்.

அதமன் கோட்டை :—இது ஒரு பெரிய கிராமம். இங்கு ஒரு பழையகோட்டை உண்டு. இங்கு வாரச் சந்தை கூடுகிறது.

4. ஹொசூர் தாலூகா

ஹொசூர் :—இது இத் தாலூகாவின் முக்கியபட்டணம். இங்கு ஒரு போர்டு ஹைஸ்கூல், சர்க்கார் வைத்தியசாலை, விவசாய கால்நடை ஆஸ்பத்திரி முதலியன இருக்கின்றன. இது பெங்களூரிலிருந்து 25 மைல் தூரத்திலிருக்கிறது. பெங்களூர், கிருஷ்ணகிரி, சேலம் முதலிய இடங்களிலிருந்து வரும் சாலைகள் இங்கே கூடுகின்றன.

இவ்வூரிலுள்ள குன்றின்மீது திப்பு சுல்தானுடைய பழைய கோட்டையும், ஒரு கோவிலும் உள்ளன. இக் கோவிலில் நடைபெறும் தேர்த் திருவிழா பார்க்கத் தகுந்தது.

மத்த கிரி :—இவ் வூரில் ராணுவத்திற்காகக் குதிரைகள் பரிபாலிக்கப் படு

கின்றன. இங்கு வாரச் சந்தை கூடுகிறது. அதில் தானியம், தோல், முதலியன ஏராளமாய் வியாபாரம் நடைபெறுகிறது.

டெங்கனிக் கோட்டை :—இது ஹொசூரிலிருந்து 16 மைல் தெற்கிலுள்ள ஒரு பெரிய கிராமம். இங்குள்ள பௌத்தராய சுவாமி ஆலயம் பிரசித்தமானது. இவ்வூரில் இரும்புக் கட்டில், பெஞ்சு, நாற்காலி முதலியன செய்யப்படுகின்றன. இது சரித்திர சம்பந்தமான ஊர். இங்குப் பாழடைந்த ஒரு கோட்டை காணப்படுகிறது.

பாகலூர் :—பாகலூர் என்றால் கன்னடத்தில் வாசல் எனப் பொருள். இது ஹொசூரிலிருந்து 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குள்ள கோட்டை சரித்திர சம்பந்தமானது. இவ்வூரைச் சுற்றிலும் தென்னந் தோப்புகள் காணப்படுகின்றன.

சூலகிரி :—இது மலைமீதுள்ள ஊர். அங்குக் குன்றுகள் சூலாயுதங்கள் போல உள்ளதால் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று. இங்கு நெய்யப்படும் அரைக் கச்சைகள் வெகு நேர்த்தியானவை.

அங்குச கிரி :—இது ஹொசூர் தாலூகாவின் வடகிழக்கில் இருக்கிறது. அதற்கு அருகில் உள்ள மலை அங்குசத்தைப்போல் உள்ளதால் இதற்கு இப் பெயர் உண்டாயிற்று. இங்கு "மகா நவமி வயல்" என்ற முன் காலத்து அரசர்களின் அரண்மனை உள்ளது. அது தற்காலம் பாழடைந்திருக்கிறது.

கேல் மங்கலம் :—இவ்வூரில் அரிசி, பாக்கு, ராகி முதலியவைகளின் வியாபாரம் நடைபெறுகிறது. இங்கு வாரச் சந்தை கூடுகிறது. மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் காலத்தில் அவருடைய ராணுவம் இங்கு தங்கியிருந்தது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

பேரிகை :—இது ஒரு ஜமீன் கிராமம். இங்குப் பட்டுப்பூச்சி வளர்க்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வூரை யடுத்த காடுகளில் தேன், ஆவாரம் பட்டை, எட்டிக்கொட்டை முதலியன ஏராளமாய் கிடைக்கின்றன.

ராயகோட்டை :—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ்வூரைச் சுற்றியுள்ள



ராயகோட்டை குன்று

காடுகளில் பல காட்டுப் பொருள்கள் கிடைக்கின்றன. இங்குள்ள குன்றின் மீது பாழடைந்த கோட்டை ஒன்றுளது. இது சமுத்திர மட்டத்திற்கு மேல் 3229 அடி உயரமுள்ளது. இங்குள்ள பள்ளத்தாக்கில் ஒரு நீர் அருவி விழுகிறது.

தளி :—இவ்வூரையடுத்த ஏரி மிகப் பெரியது. இங்கு வாரச் சந்தை கூடுகிறது. அதில் விசேஷமாக வாழைப்

பழ வியாபாரம் நடைபெறுகிறது. இவ்வூரைச் சுற்றியுள்ள காடுகளில் சந்தனமரம் பயிராகின்றன.

5. கிருஷ்ணகிரி தாலூகா.

கிருஷ்ணகிரி : இது இத்தாலூகாவின் தலைமைப் பட்டணம். இது திப்பு சுல்தான் காலத்தில் வெகு பிரசித்தி பெற்றிருந்தது. சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பெரிய சாலை இவ்வூர் வழியாகச் செல்லுகிறது. திருப்பத்தூரிலிருந்து ஒரு கிளை ரயில் பாதை இவ்வூர்வரை போடப்பட்டிருக்கிறது. இந் நகரின் வடபாகத்திற்குக்கிருஷ்ணகிரி என்றும், தென்பாகத்திற்குத் தௌலதாபாத் என்றும் பெயர்.

இச் சிறு பட்டணம் சரித்திர சம்பந்தமானது. இவ்வூருக்கு அருகிலுள்ள குன்றின்மேல் ஒரு பலமான கோட்டையைக் காணலாம். இங்கு ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இவ்வூரைச் சுற்றி திராக்ஷை நன்கு பயிராகிறது

கிருஷ்ணகிரி கோட்டை

மாத்தூர் :—இங்கிருந்து, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருக்கோவிலூர் சேலம் முதலிய இடங்களுக்கு ரஸ்தாக்கள் பிரிகின்றன. இவ்வூரில் வாரச் சந்தை கூடுகிறது.

மகாராஜா கடை :—இங்கு இப் பெயருள்ள குன்றின்மீது ஒரு கோட்டை பாழடைந்த நிலையில் இருக்கிறது. இவ்வூரைச் சுற்றிக்காடுகள் விசேஷம்.

காவேரிப்பட்டணம் :—இது தென் பெண்ணை யாற்றின் கரையிலுள்ள ஒரு பெரிய ஊர். இவ் வூரையடுத்துப் பல வெற்றிலைத் தோட்டங்களும், மாமரத் தோட்டங்களும் இருக்கின்றன. இங்கிருந்து நல்லெண்ணெய் வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகிறது.

6. ஹொசூர் தாலூகா

ஹொசூர் :—இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். வாணியாறு இதன் அருகில் ஓடுகிறது. இது சேலத்திலிருந்து வடகிழக்கில் 40 மைல் தூரத்தில் இருக்கிறது. மொரப்பூர் ஜங்ஷனிலிருந்து இவ்வூருக்குப் போகலாம். இங்கு வாரச் சந்தை கூடுகிறது. இவ்வூரின் தெற்கில் ஒரு பெரிய ஏரி உண்டு.

சிங்காரப் பேட்டை :—இவ்வூர் சேலம் ஜில்லா வடகிழக்கு எல்லையோரத்தில் இருக்கிறது. இங்கிருந்து செங்கம் கணவாய் ஆரம்பமாகிறது. சேலத்திலிருந்து திருவண்ணாமலைக்குப் போகும் பாதை இதன் மூலமாய்த்தான் செல்கிறது. இங்கு மகம்மதியர் விசேஷம். இவ்வூரைச் சுற்றியுள்ள காடுகளில் தேன், தேன் மெழுகு, மூங்கில், விறகு முதலியன அகப்படுகின்றன.

ஊத்தங் கரை :—இது ஹொசூரிலிருந்து வடக்கில் 8 மைல் தூரத்திலிருக்கிறது.

இது தேக சுகத்திற்கு ஏற்ற ஸ்தல மல்ல. இது மலேரியா ஜுரத்தால் பீடிக்கப்பட்ட ஊர். இவ்வூர் சாமல் பட்டி ரயில்வே ஸ்டேஷனுக் கருகில் இருக்கிறது. இங்கு வாரச் சந்தை கூடுகிறது. இங்கு நெசவுத் தொழி லும், புகையிலை, உளுந்து, துவரை, இவற்றின் வியாபாரமும் அதிகம்.

மொரப்பூர் :—இது ஒரு சிறிய ரயில் வே ஜங்ஷன். இவ்வூரில் வாரச் சந் தை உண்டு. இங்கு உளுந்து, ஆம ணக்கு, முதலியன நன்கு வியாபாரம் ஆகின்றன.

பொம்மிடி :—இது ஒரு முக்கிய ரயில் வே ஸ்டேஷன். சேர்வராயன் மலை யில் உற்பத்தியாகும் பொருள்களெல் லாம் இந்த இடத்தில் ஏற்றுமதி செய் யப்படுகின்றன. இங்கு வாரச் சந்தை கூடுகிறது.

தீர்த்தமலை :—இது ஹரூருக்கு வட கிழக்கில் மலைமீதுள்ள ஊர். இங் குள்ள மலைக்கோவிலும், தீர்த்தமும் பிரசித்தி பெற்றவை.

கம்பைநல்லூர் :—இது இந் நதியின் கரையின் மீதுள்ள ஒரு மிட்டா ஊர். இங்கே தானிய வியாபாரமும், நெச வுத் தொழிலும் அதிகம்.

7. ஆத்தூர் தாலூகா.

ஆத்தூர் :—இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இது வசிஷ்ட நதியின் இரு கரையிலும் ஏற்பட்டி ருக்கிறது. இங்கு ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இது சேலத் திலிருந்தே நேர் கிழக்கில் 33 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஒரு முக் கிய ரயில்வே ஸ்டேஷன். வஸிஷ்ட நதியின் வடபாகத்திலுள்ள சதுர மான கோட்டையும் அங்குள்ள கோவி லும் பிரசித்தமானவை.

ஏத்தாப்பூர் :—இவ்வூருக்கு அருகில் வசிஷ்ட நதி ஓடுகிறது. இது மிக செழிப்பான பெரிய கிராமம். இங்குப் புகையிலை, தேங்காய், வெல்லம் இவற் றின் வியாபாரம் அதிகமாய் நடை பெறுகிறது. இது தேக சுகத்திற் குத் தகுதியுள்ள ஊர்.

தலைவாசல் :—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். சேலத்திலிருந்து கூட லூருக்குப் போகும் ரஸ்தா இவ்வூர் மார்க்கமாய்ச் செல்லுகிறது.

தம்மம்பட்டி :—இது சுவேத நதிக் கரையில் ஏற்பட்டுள்ள ஒரு பெரிய கிரா மம். இங்கு வாரச் சந்தை கூடுகிறது. இவ்வூருக்குத் தெற்கில் ஒரு கணவாய் இருக்கிறது. பச்சைமலை, கொல்லி மலை இவ்விரண்டு மலைகளில் விளையும் புளி, பலா, புகையிலை, கடுகு முதலியன இவ்வூரில் அதிகமாய் விற்கப்படுகின் றன. தம்மம்பட்டி புகையிலை பிர சித்தி பெற்றது.

பெத்தநாய்க்கன் பாளையம் :—இது ஆத் தூரிலிருந்து மேற்கில் 5-வது மை லில் உள்ள ஓர் செழிப்பான கிராமம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ் வூரைச்சுற்றியுள்ள நிலத்தில் பாக்கு, தென்னை, கரும்பு விசேஷமாய்ப் பயிராகின்றன.

செந்தாரப்பட்டி :—இது ஆத்தூரிலி ருந்து திருச்சிக்குப் போகும் ரஸ்தா வில் உள்ள ஒரு ஊர். இங்குப் புகை யிலை, மிளகாய் முதலியன விளை கிறது.

கெங்கவல்லி :—இது சுவேத நதிக் கரையில் உள்ள ஒரு பெரிய கிராமம் இவ்வூரைச் சுற்றிப் புகையிலையும், நெல்லும் பயிராகின்றன. ஆத்தூருக்கும் இதற்கும் 8 மைல் தூரம்.

8. நாமக்கல் தாலூகா.

நாமக்கல் :—இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இவ்வூர் பேட்டை எனவும், கோட்டை எனவும் இரு பிரிவுகளாக இருக்கிறது. இக்கோட்டை 200 அடி உயரமும், சுமார் 4 பர்லாங்கு சுற்றளவும் உள்ளது. அப்பேட்டையில் ஒரு விஷ்ணு ஆலயம் உண்டு. இங்குள்ள ஆஞ்சநேயர் விக்ரகம் பிரசித்தமாகிறது. இங்கு ஒரு போர்டு ஹைஸ்கூல் உண்டு. இங்கு வாரச்சந்தை கூடுகிறது. இவ்வூரிலிருந்து திருச்சி, பெரம்பலூர், ஆத்தூர், சேலம், பெங்களூர், பவானி முதலிய பல இடங்களுக்கும் நாள்தோறும் மோட்டார் பஸ்கள் போகின்றன. இவ்வூரில் பட்டு நெசவு அதிகம்.

ராசிபுரம் :—இது சேலத்துக்கும் நாமக்கல்லுக்கும் மத்தியில் இருக்கிறது. இங்கு ஒரு போர்டு ஹைஸ்கூல், இருக்கிறது. இவ்வூரிலிருந்து வெல்லம் பல பாகங்களுக்கு ஏற்றுமதியாகிறது. தானிய வியாபாரர், நெசவுத் தொழில், பாத்திர வேலை இங்கு அதிகம்.

பரமத்தி :—இது ஒரு சிவ ஸ்தலம். இங்குப் பட்டு வேஷ்டிகளின் நெசவு நடைபெறுகிறது. இது நாமக்கல்லிலிருந்து தென் மேற்கே 12 மைல் தூரத்தில் இருக்கிறது.

மோகனூர் :—இது காவிரிக் கரையிலுள்ள ஒரு செழிப்பான ஊர். இங்கு ஒரு சிவன் கோவில் இருக்கிறது. இவ்வூரைச் சுற்றி வாழைத் தோட்டங்கள் விசேஷம்.

நாயனூர் மலை: இது நாமக்கல்லுக்கு வடமேற்கிலுள்ளது. இது சிறந்த விஷ்ணு ஸ்தலம். இது சந்தைகூடும் இடம்.

சேந்தமங்கலம் :—இது நாமக்கல்லிலிருந்து 7 மைல் தூரத்திலுள்ள ஒரு ஊர். இங்கிருந்து பித்தளைப் பாத்திரம், பட்டு வேஷ்டிகள், அரக்கு வளையல்கள் முதலியன பல ஊர்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

நாமகிரிப்பேட்டை :—இது ராசிபுரத்திற்கு கிழக்கில் 6-வது மைலில் உள்ள ஒரு செழிப்பான கிராமம். இவ்வூரைச்சுற்றி நெல்லும், கரும்பும் நன்கு பயிராகின்றன.

9. திருச்செங்கோடு தாலூகா.

திருச்செங்கோடு :—இது இத்தாலூகாவின் தலை நகரம். இது சங்கிரி துர்க்கம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. இவ்வூரிலுள்ள மலைக்கோவிலில் பல கல்வெட்டுச் சாசனங்களைக் காணலாம்,



திருச்செங்கோடு மலைக்கோவில்

இங்கு நெசவுத் தொழில் அதிகம். இங்குள்ள சிவாலயம் மிகப் பிரசித்தி பெற்றது. வைகாசி மாதம் நடைபெறும் திருவிழா மிகச் சிறந்தது.

சங்கிரி துர்கம் :— இவ்வூர் ஒரு முக்கிய ரயில்வே ஸ்டேஷன். இது பவானியிலிருந்து சேலம் வரும் பிரதான பாதையில் இருக்கிற ஒரு ஊர். இது தேகசுகத்திற்கு ஏற்றது. ஆகையால் இவ்வூருக்கு மேற்கில் சங்கு போல ஓர் உயரமான ஒரு குன்று இருக்கிறது. இக்குன்றின் மீது பல நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. திப்புசுல்தான் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை ஒன்றை இம்மலை மீது காணலாம்.

கொமாரபாளையம் :—இது காவிரிக் கரையில் உள்ள ஒரு பெரிய ஊர். இங்கு நெசவுத் தொழில் புரியும்



காவேரிப்பாலம்

தேவாங்கர்கள் அதிகம். இவ்வூருக்கு அருகில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிக நீளமானது.

பள்ளிப்பாளையம் :—இது காவிரி நதிக்கரையிலுள்ள ஒரு பெரிய கிராமம். இவ்வூரில் நெசவுத் தொழிலும், துவரம் பருப்பு விளைவும் அதிகம். இதற்கு அரை மைல் தெற்கில் காவேரி ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது.

எடப்பாடி :—இது சரபங்க நதிக் கரையிலிருக்கிறது. ஆமணக்கு எண்ணெய் எடுத்தல், கற்சட்டி செய்தல், வெடியுப்பு காய்ச்சுதல், பித்தளைப் பாத்திரம் செய்தல் முதலிய தொழில்கள் இவ்வூரில் நடைபெறுகின்றன. இங்குப் புகையிலை வியாபாரம் அதிகம்.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் கால் நடைச் சந்தை எந்த இடங்களில் கூடுகின்றன? இந்தச் சந்தைகளால் ஏற்படும் நன்மைகள் என்ன ?

2. நமது ஜில்லாவில் எவ்விடங்களில் சிவ ஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் காணப்படுகின்றன ?

3. நமது ஜில்லாவில் சரித்திர சம்பந்தமான ஊர்கள் எவை ?

4. நமது ஜில்லாவிலுள்ள சுக வாசஸ்தலங்களைக் கூறுக.

5. செவ்வாய்ப் பேட்டையிலிருந்து என்ன பொருள்கள் ஏற்றுமதியாகின்றன ?

6. மாக்னிஸைட் எங்கு அகப்படுகிறது ? இதனால் என்ன செய்கிறார்கள் ?

7. நெசவுத் தொழில் நடக்கும் சில கிராமங்களைக் கூறுக.

8. விவசாய கால் நடை ஆஸ்பத்திரி எங்கிருக்கிறது ?

9. பட்டுப் பூச்சி எங்கு வளர்க்கிறார்கள் ?

10. புகையிலை எந்தக் கிராமங்களில் விசேஷமாகப் பயிராகிறது ?

11. அடியிற் கண்ட இடங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (1) திருச்செங்கோடு, (2) ஆத்தூர், (3) நாமக்கல், (4) சேந்தமங்கலம்.



சேலம் ஜில்லா
போக்குவரவு சாதனங்கள்
பெங்களூருக்கு
ஹொசூர்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூருக்கு
மாத்தூர்
திருவண்ணாமலைக்கு
தர்மபுரி
ஹரூர்
மொரப்பூர் ஜ.
மேட்டூர் அணை
ஓமலூர்
ஏற்காடு
தாரமங்கலம்
சேலம் ஜ.
ஆத்தூர்
கடலூருக்கு
சேலம்
கொமாரபாளையம்
கோயமுத்தூருக்கு
சங்ககிரி
திருச்செங்கோடு
ராசிபுரம்
திருச்சிக்கு
சேந்தமங்கலம்
ஈரோட்டுக்கு
நாமக்கல்
திருச்சிக்கு
ரயில்பாதை
சாலைகள்
S.V.V.

6. போக்குவரவு சாதனங்கள்

பாலர்களே ! ஜனங்கள் ஓர் ஊரி லிருந்து மற்ருெரு ஊருக்குப் போக வேண்டுமானுல் வண்டிகளி லாவது, மோடார் பஸ்களி லாவது ரயிலிலா வது பிரயாணம் செய்கிருர்கள் அல்லவா ! வண்டிகளும், மோடார் பஸ்களும் போக சாலைகள் போடப்பட்டுள் ளன. ரயில் வண்டிகள் இருப்புப் பாதைமீது ஓடும். நமது ஜில்லா உள்நாட்டு ஜில்லா வாகையால், கால்வாய்கள் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் போக்கு வரவு இல்லை.

சாலைகள் : சேலம் நகரினின்று பல ரஸ்தாக்கள் பிரிகின்றன. முதல் தரமான பல ரஸ்தாக்கள் இந்த ஜில்லாவில் உண்டு.

1. சென்னையி லிருந்து தர்மபுரி, தொப்பூர் கணவாய் மார்க்கமாய் மேட்டூர் அணைக்கும், அப்பால் கோயமுத்தூர் ஜில்லாவிற்குள் நுழையும் பிரதான பாதை.

2. சேலத்தி லிருந்து சங்ககிரி, கொமாரபாளையம் மார்க்கமாய் பவானியில் சேரும் மற்ருெரு முக்கிய பாதை.

3. சேலத்திலிருந்து ஏர்க்காடு செல்லும் முக்கிய ரஸ்தா.

4. சேலத்தி லிருந்து கடலூருக்கு ஆத்தூர்மார்க்கமாய் செல்லும் பாதை.

5. சேலத்தி லிருந்து ராசிபுரம், நாமக்கல் மூலமாய்த் திருச்சிக்குச் செல்லும் ரஸ்தா.

6. சேலத்திலிருத்து, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஹொசூர் மார்க்கமாய்ப் பெங்களூருக்குச் செல்லும் ரஸ்தா.

மேற்கூறிய எல்லா ரஸ்தாக்களிலும் ஏராளமாய் மோடார் பஸ் போக்குவரவு நடைபெறுகிறது. அவை தவிர, இந்த ஜில்லாவில் பல கிளை ரஸ்தாக்கள் உண்டு. அவற்றைப் படத்தில் பாருங்கள்.

இருப்புப்பாதைகள்: சென்னையிலிருந்து மலையாளத்துக்குச் செல்லும் இருப்புப்பாதை நமது ஜில்லா வழியாகச் செல்லுகிறது. இது பிராட்கேஜ். நமது ஜில்லாவில் இப் பாதையில்



சேலம் ஜங்ஷன்

மொரப்பூர், சேலம் என்ற இரு ஜங்ஷன்கள் இருக்கின்றன. இப் பாதையிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள் :

1. சாமல்பட்டி, தாசம்பட்டி, தொட்டம்பட்டி, மொரப்பூர், தொங்கனூர், புத்திரெட்டி பட்டி, பொம்மிடி, லொக்

கூர், டேனிஷ் பேட்டை, தின்னப் பட்டி, கருப்பூர், சேலம், வீரபாண்டி ரோட், வேம்படிதாளம், மகுடஞ் சாவடி, காளிபட்டி ரோட், சங்கிரி துர்க்கம், ஆனங்கூர், காவேரி.

2. சேலம் ஜங்ஷனிலிருந்து மற்றொரு பிராட்கேஜ் பாதை மேட்டூர் அணைக்குப் போடப்பட்டுள்ளது. இப்பாதையிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள் · ஓமலூர், மேச்சேரி ரோட்.

3. சேலம் ஜங்ஷனிலிருந்து ஆத்தூர் மார்க்கமாய் தென் ஆற்காடு ஜில்லாவுக்குள் போகும் மீடர் கேஜ் பாதை. இப்பாதையிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்: சேலம் மார்க்கட், சேலம் டவுன், சேலம் கிழக்கு, மாசிநாயக்கன் பட்டி, மின்னம்பள்ளி, சேஷன் சாவடி, வாழைப்பாடி, ஏத்தாப்பூர் ரோட், பெத்தநாயக்கன்பாளையம், கல்பகனூர், ஆத்தூர், காட்டுக்கோட்டை, சார்வாய், தலைவாசல்.

4. முன்கூறிய மொரப்பூர் ஜங்ஷனிலிருந்து ஹொசூர்வரை தர்மபுரி மார்க்கமாகப் போடப்பட்டுள்ள மிகக் குறுகிய பாதை. இப்பாதையிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்: சாணிமுக்கனூர், செம்மனஹல்லி, தர்மபுரி, இருளப்பட்டி, பாலக்கோடு, மாரண்டஹல்லி, ராயக்கோட்டை, நாகதுணை, கீழமங்கலம், ஹொசூர்.

5. வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூர் ஜங்ஷனிலிருந்து கிருஷ்ணகிரி வரை உள்ள மற்றொரு குறுகிய ரயில் பாதை.

பயிற்சி

1. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய சாலைகள் யாவை?

2. இந்த ஜில்லாவிலுள்ள முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களையும் ஜங்ஷன்களையும், எழுது.

3. சேலம் ஜில்லா படம் வரைந்து, அதில் இந்த ஜில்லாவின் முக்கிய சாலைகளையும், இருப்புப்பாதைகளையும் குறி.

4. ஒருவன் சங்கரிதுர்க்கத்திலிருந்து ஆத்தூருக்குப் போக வேண்டுமானால் எங்கு ரயில் மாற வேண்டும்? இவன் போகும் வழியிலுள்ள முக்கிய ஸ்டேஷன்களைக் கூறுக.

5. ஒருவன் நாமக்கல்லிலிருந்து மேட்டூர் அணையைப் பார்க்கச் செல்ல வேண்டுமானால் எது வரையில் பஸ்ஸில் போக வேண்டும்? எங்கிருந்து எது வரை இரயிலில் போகவேண்டும்?

7. ஜீவனோபாயங்கள்

நமது ஜில்லாவிலுள்ள ஜனங்களில் பலர் பயிர்த் தொழில் செய்து ஜீவிக்கிறார்கள் என்று முன்பே வாசித்துள்ளோம். மலைப் பிரதேசங்களில் உள்ளவர்களில் பலர் விறகு சேகரித்து பட்டணங்களுக்குக் கொண்டுவந்து விற்பனை செய்து ஜீவிக்கிறார்கள். நெசவுத் தொழில் செய்து ஜீவிப்போர் வெகு அதிகம்.

சேலம் நகருக்கு சுற்றுப் புறங்களில் உள்ள ஊர் ஜனங்கள் பகலில் சேலத்திற்குச் சென்று பல வித வேலைகள் செய்து பணம்பெற்று ஜீவிக்கிறார்கள். தவிர சேலத்தில் உள்ள ராஜேந்திர

மில், திருச்செங்கோடு மில் இவற்றில்



ராஜேந்திர மில்

நூற்றுக் கணக்கான கூலியாட்கள் பஞ்சு நூல் நூற்குந் தொழில் புரிகின்றனர்.

இந்த ஜில்லாவில் 100 ரூபாய்க்கு மேல் சம்பள முள்ள ஆபீஸர்கள் சுமார் 150 பேர்கள் உண்டு. கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும், குமாஸ்தாக்களும் பலர் உளர். உபாத்திமைத் தொழிலில் சுமார் 2,000 பேர் ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

8. சீதோஷ்ண நிலைமைக்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்குமுள்ள சம்பந்தா சம்பந்தம்

சீதம் என்றால் குளிர்ச்சி, உஷ்ணம் என்றால் சூடு என்று அர்த்தம். ஓரிடத்தில் உஷ்ணத்தினாலும், குளிர்ச்சியினாலும் ஏற்படும் மாறுதல்களுக்குச்சீதோஷ்ண நிலை என்று பெயர். ஓரிடத்தில் பயிராகும் தாவரங்கள் அவ்விடத்தின் சீதோஷ்ண நிலையைப் பொறுத்ததாகும். சில பயிர்களுக்கு அதிக உஷ்ணம் வேண்டும். சில பயிர்களுக்கு மிதமான உஷ்ணம் வேண்டும். உதாரணமாக நமது ஜில்லாவில் உஷ்ணமான சமவெளிகளில் நெல், கரும்பு முதலானவை அதிகமாகப் பயிராகின்றன. மித உஷ்ணமான ஏர்க்காடு மலைச் சாரல்களில் காப்பி பயிராகின்றது. காடுகளில் தேன், ஆவாரம் பட்டை, எட்டிக் கொட்டை கிடைக்கின்றன.

இதைப் போலவே, ஓரிடத்தில் பயிராகும் தாவரங்களுக்கும், அங்கு வசிக்கும் மனிதர் தொழிலுக்கும் நெருங்கிய சம்பந்த முண்டு. நெல் விசேஷமாகப் பயிராகு மிடங்களில் குடிகள் அதிக செல்வவந்தர்களா யிருக்கிறார்கள். இங்கு நெல் வியாபாரம் அதிகமாக நடைபெறுகிறது. கரும்பு விசேஷமாகப் பயிராகு மிடங்களில் கரும்பாலைகள் ஏற்படுகின்றன. இங்கு வசிக்கும் ஜனங்கள் கரும்பாலைகளில் வேலை செய்கிறார்கள். முசுக்கொட்டைச்செடி அதிகமாகப் பயிராகுமிடங்களில் ஜனங்கள் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில் செய்கிறார்கள். பட்டு உற்பத்தி செய்யு மிடங்களில் பட்டு நூல் நெசவு நடைபெறுகிறது. காடுகளுக் கருகில் வசிப்பவர்கள் காட்டு மரங்களை வெட்டியும், காட்டுப்பொருள்களைச் சேகரித்து விற்றும் ஜீவிக்கின்றனர். காப்பி விளையுமிடங்களில் காப்பி பதனிடும் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன.

நிலவளமுள்ள சமவெளிகளில் பயிரிட அதிகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்கிறது. ஆகவே அங்குள்ள ஜனங்கள் சோம்பேறிகளாய் உல்லாசமாகக் காலங் கழிக்கின்றனர். நிலவள மில்லா மலை நாட்டில் பயிரிட அதிகக் கஷ்டப்பட வேண்டி யிருக்கிறது. ஆகவே அங்கு வசிப்பவர்கள் திடகாத்திரராயும், சுறுசுறுப்புள்ளவராயு மிருக்கிறார்கள்.

இதைப் போலவே இவ் வுலகத்தில் பல பாகங்களின் சீதோஷ்ண ஸ்திதி மாறுபடுகிறது. இவ்விடங்களில் பயிராகும் தாவரங்களும் வித்தியாசப்படுகின்றன. இங்கு வசிக்கும் ஜனங்கள் நடை யுடையிலும், தொழிலிலும் வித்தியாசப்படுகின்றனர்.

பயிற்சி

1. சீதோஷ்ண ஸ்திதி என்றால் என்ன?
2. ஓரிடத்தில் பயிராகும் தாவரங்கள் எதைப் பொறுத்தது?
3. தாவரங்களுக்கும் ஜனங்களுடைய தொழிலுக்கு முள்ள சம்பந்த மென்ன? உதாரணத்துடன் விளக்குக.
4. சமவெளிகளில் வசிக்கும் ஜனங்கள் பலயீனமாகவும், மலைகளில் வசிப்பவர் பலமுள்ளவர்களாகவு மிருப்பதேன்?

Printed at the T. V. C. Press, Madras.— 29-11-1939.